பக்கங்கள் - எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் 2037 புரட்டாதி 26 வியாழக்கிழமை (12.10.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:317

# முகமாலை - கிளாலி - நாகர்கோவில் மும்முனைகளில் நேற்று உக்கிரச் சமர்!

## பேரிழப்புகளை அடுத்து மோதல் மதியத்துடன் மந்தம்

### 35 படையினர் பலி! 200 பேர் காயம் என்கின்றது இராணுவத்தரப்பு

### 75 படையினரின் சடலங்கள் தம்வசம் என்கின்றனர் புலிகள்

கொழும்பு, ஒக்டோபர் 12

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மாத இறுதியில் அமைதி முயற்சிகள் தொடர்பான நேரடிப் பேச்சுகளை நடத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வரும் நிலையில், நேற்றுக் காலை கிளாலி - முகமாலை - நாகர்கோவில் முன்னரங்கப் பகுதிகளில் மும்முனைகளில் இரு தரப்பினருக்கும் இடையில் உக்கிரச் சமர் வெடித்தது.

தாராளமாக விமானக் குண்டு வீச்சுகள், கடும் ஷெல் தாக்குதல்கள், அகோரப் பீரங்கி வேட்டுகள் என அந்தப் பிரதேசம் நேற்றுக் காலையில் அதிர்ந்தது. ஆனால், அங்கு ஏற்பட்ட பேரிழப்புகளை அடுத்து மோதல் நேற்று மதியத்துடனேயே மந்த நிலைக்குத் தணிந்தது.

மோதல் வெடித்து குறுகிய நேர இடைவெளிக்குள் பலத்த உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டன என்று களமுனைத் தகவல்கள் தெரிவித்தன. இராணுவத்தரப்பில் குறைந்தது ஆறு அதிகாரிகள் மற்றும் 38 சிப்பாய்கள் உயிரிழந்தனர் என்பதை கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் ஊர்ஜிதம் செய்தன என்று செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டன.

சண்டைக்களத்தில் இருந்து சுமார் 75 வரையான படையினரின் சடலங்களைத் தாங்கள் மீட்டுள்ளனர் என்று விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் தெரிவித்திருக்கிறார்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழுவினர் விரும்பினால் முன்னரங்கப் பகுதிக்குச் செல்லலாம்

### பாதுகாப்பை யாரும் உறுதிப்படுத்த முடியாது என்கிறார் பிரிகேடியர்



லண்டன், ஒக் 12

முகமாலை முன்னரங்குப் பகுதிக்குப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் செல்வதை நாங்கள் தடுக்கவில்லை. விரும்பினால் அவர்கள் அங்கு செல்லலாம்.

இப்படித் தெரிவித்தார் அரச இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க.

நேற்றைய சண்டை குறித்து அவர் பி.பி.ஸிக்குக் கூறியதாவது:-

உண்மையில் கடந்த சில தினங்களாக விடுதலைப் புலிகள் பளை மற்றும் பூநகரி ஆகிய இடங்களிலிருந்து முகமாலையில் எமது முன்னணிக் காவலரண்கள் மீது தாக்குதல் நடத்திவருகின்றார்கள். நேற்றிரவும் (செவ்வாய்) முகமாலையிலும் நாகர்கோவிலிலும் பெரும் எண்ணிக்கையில் (08ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானத்தைச் சீர்குலைக்கின்ற அடாவடித்தனமான நடவடிக்கை

### புலிகளின் இராணுவப் பேச்சாளர் இளந்திரையன்



லண்டன், ஒக். 12

சமாதானம் மீதான நம்பிக்கையையும், அதற்கான சூழ்நிலையையும் ஒட்டுமொத்தமாகச் சீர்குலைக்கின்ற இராணுவ நடவடிக்கை [illegible]து.

முகாமாலையில் நேற்று இடம்பெற்ற சமர் குறித்துக் கருத்து வெளியிட்ட புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் இப்படிக்கூறினார்.

நேற்றிரவு பி.பி.ஸி. தமிழோசையில் ஒலிபரப்பான அவரது செவ்வி வருமாறு:-

★ **கேள்வி:-** உங்களது பதில் மதிப்பீட்டின்படி இராணுவ இழப்பு எவ்வளவாக இருக்கும் என்று நினைக்கிறீர்கள்?

● **இளந்திரையன்:-** இராணுவத்தின் (08ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்குப் பாதிப்பு இல்லை என்கிறது அரசு

கொழும்பு, ஒக். 12

யாழ். குடாநாட்டில் இராணுவத்தினருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்றுவரும் மோதல்கள் சமாதானப் பேச்சுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாது என்று அரசு தெரிவித்துள்ளது.

பேச்சுக்கு அவசியமான நிபந்தனைகளில் அது தெளிவாகக் கூறப்பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினால், அதற்குப் பதில் தாக்குதல் நடத்த அர

(08ஆம் பக்கம் பார்க்க)

## இது ஒரு மோசமான சண்டை

லண்டன், ஒக். 12

தற்போதைய சூழல் சற்றுக் கடினமாக உள்ளது. இது ஒரு மோசமான சண்டை.

இப்படித் தெரிவித்திருக்கிறார் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தோபினுர் ஓமர்சன்.

முகமாலையில் நேற்று இடம்பெற்ற சண்டை தொடர்பாக கருத்துக்கேட்டபோதே அவர் இதனை

(08ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படையினருக்கான ஆயுதங்கள் இலங்கைக்கு வழங்குகிறது இந்தியா!

இலங்கைக் கடற்படையினருக்கான மேலும் ஒரு தொகுதி ஆயுதங்களை வழங்குவதற்கு இந்தியா தீர்மானித்திருக்கிறது.

இந்திய கடற்படையின் தளபதி அட்மிரல் அருண் பிரகாஷ் இந்தத் தகவலை வெளியிட்டிருக்கிறார்.

இலங்கை அரசு தனது பாதுகாப்பை வலுப்படுத்த இந்திய அரசிடம் ஆயுதங்களைக் கோரியிருந்தது. ஆயினும் கோரப்பட்ட ஆயுதங்கள் முழுமையாக இலங்கை அரசுக்கு வழங்கப்படவில்லை என்று குறிப்பிட்ட இந்திய கடற்படைத் தளபதி, சில வகையான ஆயுதங்களை இலங்கைக்கு வழங்க இந்தியா முடிவு செய்திருப்பதாகவும் கூறினார்.

இதனடிப்படையில் இந்தியப்

(08ஆம் பக்கம் பார்க்க)

## திடீர் ஊரடங்குச் சட்டத்தினால் தென்மராட்சி கிழக்கில் பதற்றம்

தென்மராட்சி, ஒக். 12

தென்மராட்சி கிழக்குப் பகுதியில் நேற்றுக் காலை 8.15 மணிக்கு திடீரென ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதால் அப்பகுதிகளில் பெரும் பதற்றநிலை காணப்பட்டது.

ஒன்றரைமாத இடைவெளியின் பின்னர் ஆர்வத்துடன் நேற்று பாடசாலைகளுக்கு வருகை தந்த மாணவர்கள் உடனடியாக வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். எனினும், சாவகச்சேரி நகரப்பகுதி பாடசாலைகள் வழமைபோல் இயங்கின.

(08ஆம் பக்கம் பார்க்க)

## சிப்பாய் ஒருவர் புலிகள் வசம்

கிளிநொச்சி, ஒக். 12

நேற்றைய சண்டையில் அரசுப் படைச் சிப்பாய் ஒருவரைத் தாங்கள் உயிருடன் பிடித்திருக்கின்றனர் என்று விடுதலைப் புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

பதினெட்டு வயதான சமந்த வீரசிங்க என்ற சிப்பாயே காயங்

(08ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் பயணத்துக்கென ஆயிரம் பேர் காங்கேசனுக்கு!

யாழ்ப்பாணம், ஒக். 12

கப்பல் மூலம் திருகோணமலைக்கு அழைத்துச்செல்வதற்கென சுமார் ஆயிரம் பயணிகள் நேற்று காங்கேசன்துறைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

கப்பல் பயணத்துக்கென பெரும் எண்ணிக்கையான பயணிகள் நேற்றுக்காலை முதல் யாழ். சிங்கள மகா வித்தியாலயத்துக்குச் சமீபமாக ஒன்றுகூடினர். இவர்களிலிருந்து (08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இலங்கையில் பத்திரிகைத்துறையின் அவலநிலைக்கு

# சர்வதேசப் பத்திரிகைகள் குழு அரசாங்கம் மீது குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக்.12

பத்திரிகைத்துறைக்கு குறிப்பாகத் தமிழ்ப் பத்திரிகைகளுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் இன்று நேர்ந்துள்ள அவல நிலைக்கு இலங்கைவந்துள்ள சர்வதேசப் பத்திரிகை அமைப்புகளின் ஐவர் குழு இலங்கை அரசுமீது குற்றம்சுமத்தியுள்ளது.

இலங்கை ஊடகத்துறையில் பாதுகாப்பு நிலைமை சீரழிந்து வருகிறது. நாட்டுப் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்பினராலும் குறிப்பாகத் துணை இராணுவப் படையினராலும் ஆயுதக் குழுக்களினாலும் ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்படுகிறார்கள்; கடத்தப்படுகிறார்கள்; தாக்கப்படுகிறார்கள். பத்திரிகை விநியோகம் வன்செயல் நடவடிக்கைகள் மூலம் தடை செய்யப்படுகின்றது. பத்திரிகையாளர்கள், அவர்களிலும் தமிழ்ப்பத்திரிகையாளர்கள் கொல்லப்படுகிறார்கள். இந்த வருடம் ஒகஸ்ட்டிலிருந்து இதுவரை 8 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். சில கொலைகள் குறித்த ஆதாரங்கள் இருந்தும் கொலைகாரர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. இப்படிச் சர்வதேசப் பத்திரிகை அமைப்புகளின் குழு நேற்று பத்திரிகையாளர் மாநாடு நடத்தி அறிவித்திருக்கிறது.

பன்னிரண்டு பத்திரிகை அமைப்புகளின் சார்பில் ஐந்து அமைப்புகளைச் சேர்ந்த ஐவர் குழு நிலைமைகளை நேரில் அவதானித்து தமது அமைப்புகள் மூலம் ஆவன செய்வதற்காக மூன்றுநாள் விஜயத்தை மேற்கொண்டு கடந்த 9ஆம் திகதி கொழும்பு வந்து சேர்ந்தது.

டேவிட் டட் கே (**International Press Institute**), ஜொஸ்லின் ஜஸியா (**Unesco**), ஜிம் நொலான் (**International Federation of Journalism**), றெட் பட்டாரியோ (**International News Safety Institute**), தோமாஸ் ஹக்ஸ் (**International Media Support**) ஆகிய ஐவருமே இலங்கை வந்தனர்.

ஸ்ரீலங்கா ஊடக நிறுவனம், சுதந்திர ஊடக இயக்கம், ஸ்ரீலங்கா ஊடகவியலாளர் கூட்டமைப்பு, ஊடகத் தொழிலாளர்கள் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா தமிழ் ஊடகவியலாளர் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் ஆகியவற்றின் அழைப்பின் பேரிலேயே குழுவினர் இங்கு வந்தனர்.

இலங்கையில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்குத் தேவையான ஜனநாயக சமுதாயத்துக்கு மிகவும் இன்றியமையாதவை பத்திரிகைச் சுதந்திரமும் கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரமுமே ஆகும். இதைக் குழு வலியுறுத்தியது.

குழு இங்கே, பத்திரிகையாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், ஊடக முதல்வர்கள், சட்ட வல்லுநர்கள், அரசாங்கப் பிரதிநிதிகள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள், பாதுகாப்புப் படையினர், சர்வதேச சமூகத்தினர் முதலான பலருடனும் பரந்த அளவில் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டது.

**தமிழ் பத்திரிகைகள் அடக்கி ஒடுக்கப்படுவது குறித்து விசேட கவனம்**

குழு இலங்கையின் சிங்கள, தமிழ், ஆங்கிலப் பத்திரிகைகளின் இன்றைய நிலைபற்றி ஆராய்ந்தது. தமிழ்ப் பத்திரிகைகள் அடக்கி ஒடுக்கப்படுவது குறித்து குழு விசேட கவனம் செலுத்தியது. தமிழ்ப் பத்திரிகைகள் விசேடமாக யுத்தம் நடைபெறுவதால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தொடர்ந்து தாக்குதலுக்கு இலக்காகி வருகின்றன. இதனால் வடக்கு-கிழக்கில் சுதந்திர தகவல் பரிமாற்றம் மட்டுப்படுத்தப்பட்டுவிட்டது. என்ன நடக்கிறது என்று மக்களுக்குச் சரியாகத் தெரியவில்லை. வதந்திகளையும் வெறுப்பூட்டும் பேச்சுகளையுமே கேட்டுவருகிறார்கள். இது ஸ்திரமற்ற நிலைமையையும் சண்டையையும் மேலும் அதிகரிக்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் ஊடகவியலாளர்கள் சுதந்திரமாகச் செய்திகளைக் கொடுக்க விடமால் தடுக்கப்படுகிறார்கள். அதன் நேரடி விளைவாக பத்திரிகைச் சுதந்திரமும், கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரமும் வெகுவாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்று குழுவினர் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தனர்.

பத்திரிகையாளர்கள் மீதான பயமுறுத்தல்கள், துன்புறுத்தல்கள், கடத்தல்கள், தாக்குதல்கள் எல்லாவற்றையும் அவற்றில் ஈடுபடுபவர்கள் நிறுத்தவேண்டும் என்று குழுவினர் வேண்டுகோள் விடுத்தனர்.

சுப்பிரமணியம் சுகிர்தராஜன், சுரேஷ்குமார், ரஞ்சித்குமார், லக்மல் டி சில்வா, மரியதாஸ் மனோஜன்ராஜ், சதாசிவம் பாஸ்கரன், சின்னத்தம்பி சிவமகாராஜா ஆகியோர் இந்த வருடத்தில் கொலை செய்யப்பட்டவர்கள். இவர்களுடைய கொலை பற்றியும் முன்னர் கொலைசெய்யப்பட்ட பலருடைய கொலை பற்றியும் எல்லோரும் அறியக்கூடிய விதத்தில் அரசு பூரண விசாரணைகளை நடத்தவேண்டும். பத்திரிகையாளர்களுக்கு அவர்களின் குடும்பங்களுக்கும் விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தல்கள் பற்றியும் விசாரணை நடத்தவேண்டும் என்று குழு கேட்டுக்கொண்டுள்ளது.

இந்த விடயம்பற்றி அரச பாதுகாப்பு பேச்சாளரும், அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெலவுடன் குழு பேசியபோது விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்றும் அவை பற்றிய முன்னேற்றம் குறித்து கிரமமான முறையில் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும் என்றும் அமைச்சர் உறுதி அளித்தார் எனக்குழுவினர் தெரிவித்தனர்.

இலங்கையில் விசாரணைகள் அறிவிக்கப்படுவதும், அவை ஒன்றில் கிடப்பில்போடுவதும் அல்லது இழுத்தடித்துக்கொண்டே போய் கடைசியில் கைவிடப்படுவதும்தான் வழக்கம். விசாரணைக்குக் காலக்கெடு வைத்தீர்களா என்று குழுவினரிடம் கேட்டபோது அதற்கு நேரடியான பதில் கிடைக்கவில்லை.

**இராணுவத்தினரோ பொலீஸாரோ பத்திரிகைச் சுதந்திரத்தில் தலையிடக் கூடாது**

பத்திரிகைச் சுதந்திரத்தில் இராணுவத்தினர் குறுக்கிடுவது பற்றிக் குழுவினர் பிரஸ்தாபித்தபோது நாடு முழுவதும் இராணுவத்தினரோ, பொலிஸாரோ பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் விடயங்களில் தலையிடக்கூடாது என்று அமைச்சர் ரம்புக்வெல கூறினார் என்றும் -

இராணுவத்தினர் தலையிட்டதாகக் குறிப்பிடப்படுவது பற்றித் தமக்கு முழு விவரமும் தெரியாது என்றும் - எதற்கும் அதுபற்றியும் விசாரணை நடத்தப்படும் என்றும் அமைச்சர் கூறினார் எனவும் குழுவினர் தெரிவித்தனர். இலங்கையில் பத்திரிகைத்துறைக்கு இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடியை உலகம் எங்கும் சரியான இடங்களில் சம்பந்தப்பட்டவர்களின் கவனத்துக்குக்கொண்டவரத் தாம் உறுதி பூண்டுள்ளதாகக் குழுவினர் கூறினர்.

அதை உடனே செய்வீர்களா அல்லது அரசினர் தமது விசாரணைகளை முடிக்கும்வரை காத்திருப்பீர்களா என்று கேட்டதற்கும் நேரடியான பதில் வரவில்லை. தாம் நிலைமையை அவதானித்து ஆவன செய்வோம் என்று உறுதியளித்தனர்.

# அமைச்சின் இணைப்பாளர் கொலை; வன்மையாகக் கண்டிக்கிறது ஈ.பி.டி.பி.

கொழும்பு, ஒக். 12

சமூகசேவைகள் அமைச்சின் யாழ். மாவட்ட இணைப்பாளரும், தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியின் முன்னாள் அதிபருமான நாகராஜா சுட்டுக்கொல்லப்பட்டமையை ஈ.பி.டி.பி. கட்சி வன்மையாகக் கண்டித்திருக்கிறது. இது தொடர்பாக அக்கட்சி வெளியிட்ட கண்டன அறிக்கை வருமாறு:-

தமிழ் பேசும் மக்களின் விடுதலையின் பெயரால் இன்றுவரை தொடரும் படுகொலைக் கலாசாரத்திற்குப் பலியாகிப்போனவர்கள் ஏன் என்று கேள்வி எழுப்பியவர்கள், தவறான வழிமுறைக்கு ஒத்துப்போக மறுப்பவர்கள், சக இயக்கப் போராளிகள், மாற்றுக் கருத்தாளர்கள், கல்விமான்கள், அப்பாவிக் குடிமக்கள் எனத் தொடர்கின்றன.

தொடரும் படுகொலைகள் இன்னொரு மண்ணில் இருந்து வந்ததனால் அல்லது இன்னொரு இனத்தவனால் புரியப்படுகின்றவைகள் அல்ல. சொந்த மண்ணையும் சொந்த இனத்தையும் சேர்ந்தவர்களாக இருந்துகொண்டு கொலைத் தொழிலை ஆதாரமாகக் கொண்ட மக்கள் விரோத சக்திகளால் மட்டுமே இதுபோன்ற கொலைகள் தொடரப்படுகின்றன.

படுகொலைகளையோ அன்றி படுகொலை செய்யத் தூண்டுவதால் உருவாகும் பழிவாங்கும் செயல்களையோ ஈ.பி.டி.பியினராகிய நாம் ஒருபோதும் அங்கீகரிக்கப் போவதில்லை. எங்கள் கனவுகள் யாவும் குருதி சிந்தாத தேசம், உறுதி தளராத உரிமையின் தாகம். இதுவே ஈ.பி.டி.பியின் திடமான தீர்மானம்.

படுகொலைகளுக்கு எதிரான அரசியல் ரீதியான கண்டனங்களும், அச்சத்தில் உறைந்திருக்கும் மக்களின் மௌனங்களும் படுகொலைகளைத் தடுத்து நிறுத்தும் பணியில் வெற்றிகாணப்போவதில்லை. யுத்தத்திற்கு எதிராகவும், அர்த்தமுள்ள அரசியல் தீர்வுக்காகவும் நடைமுறைச்சாத்தியமான வழிமுறையில் உழைப்பதும் அதனோடு மௌனத்தைக் கலைத்து மக்கள் அணிதிரள்வதும் மட்டும் தான் படுகொலைகளைத் தடுத்து நிறுத்த இருக்கின்ற ஒரே வழிமுறையாகும்.

மகாஜனாக் கல்லூரியின் முன்னாள் அதிபர் நாகராஜா ஜனநாயகத்தை நேசித்தவர். மனித உரிமைகளுக்காகக் குரல்கொடுத்தவர், தான் வாழ்ந்த சமகால, எதிர்கால கல்விச் சமூகத்தின் உயர்ச்சிக்காகவும், எழுச்சிக்காகவும் உறுதியுடன் உழைத்தவர், உண்மையின் பக்கம் நின்று உள்ளதை உள்ளபடி உரைப்பதற்குத் தன்னையே அர்ப்பணித்தவர். ஆகையால்தான், அவர் சமூகசேவைகள் அமைச்சின் யாழ். மாவட்ட இணைப்பாளராகத் துணிச்சலுடன் செயலாற்றியவர்.

நாகராஜா அதிபருக்கு நாம் செலுத்தும் அஞ்சலி என்பது படுகொலைக் கலாசாரத்தை முழுமையாகத் தடுத்துநிறுத்துவதும், குருதி சிந்தாத சமாதான தேசத்தையும் எடுத்துநிறுத்துவதுமேயாகும்.

நாகராஜா அதிபரின் இழப்பின் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் எம் தேசத்துக் கல்விச் சமூகத்திற்கும், உற்றவர்கள், உறவினர்கள், குடும்பத்தவர்கள் அனைவருக்கும் நாம் கூறும் ஆறுதல் [illegible] லும் என்பது [illegible] கப்பட்டுள்ளது.

## வடமராட்சியில் ஓட்டோச் சாரதி சுட்டுக்கொலை!

உடுப்பிட்டி, ஒக்.12

வடமராட்சி, தும்பளை வீதி, 4ஆம் குறுக்குத்தெருவில் ஓட்டோச் சாரதி ஒருவர் நேற்றுக் காலை சுட்டுக்கொல்லப்பட்டார்.

பருத்தித்துறை முனையைச் சொந்த இடமாகக் கொண்ட மூன்று பிள்ளைகளின் தந்தையான எமிலிபாம்பிள்ளை தேவராஜா (வயது 56) என்பவரே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவராவார். இவர் தனது ஓட்டோவில் தும்பளை வீதியூடாகச் சென்றுக் கொண்டிருந்த சமயம் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் வழிமறித்து ஓட்டோவுக்குள் வைத்துச் சுட்டு விட்டுத் தப்பிச் சென்றுவிட்டதாகக் கூறப்பட்டது.

இவரது சடலம் பருத்தித்துறை நீதிவானின் உத்தரவின் பெயரில் மந்திகை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு, பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. (155-203)

# கல்விமானும் பத்திரிகையாளருமான ஏ.ஜே.கனகரத்னா காலமானார்

யாழ்ப்பாணம், ஒக்.12

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் மிக நீண்டகாலம் ஆங்கில விரிவுரையாளராகப் பணிபுரிந்தவரும் ஆங்கிலப் பத்திரிகைத் துறையில் உழைத்தவரும் தலைசிறந்த விமர்சகருமான ஏ.ஜே.கனகரத்னா தமது 74 ஆவது வயதில் காலமானார்.

ஆங்கில இலக்கியப் புலமையாளரும், கல்விமானுமாகிய அவர் சிறிது காலம் சுகவீனமுற்று மருத்துவ சிகிச்சைக்காகக் கொழும்பு சென்றிருந்தவேளை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நேற்றுக் காலமானார்.

ஆங்கில இலக்கியம், தமிழ் இலக்கியம், இலக்கிய விமர்சனம், நவீன இலக்கியம், நாடகம் என்று பல்துறை ஆளுமை மிக்கவராகத் திகழ்ந்தார் அவர்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத்தைச் சிறப்புப் பாடமாகக் கற்றுத் தேறிய அவர், யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவராவார்.

யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி, மட்டக்களப்பு தம்பிலுவில் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியராகப் பணிபுரிந்தவர்.

**Ceylon Daily News** பத்திரிகை ஆசிரிய பீடத்தில் பணியாற்றிய ''ஏ.ஜே'', பின்னர் **Saturday Review** பத்திரிகையின் இணை ஆசிரியராகவும் **Cooperator** பத்திரிகையின் ஆசிரியராகவும் பணிபுரிந்தவர். ''திசை'' பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும் பணியாற்றியவர்.

யாழ். பல்கலைக்கழகத்திலிருந்தும் பின்னர் இப்போது கிழக்குப் பல்கலைக்கழகத்திலிருந்தும் வெளிவரும் **"Third Eye"** சஞ்சிகையின் ஆசிரியராக இறுதிவரை கடமையாற்றினார்.

மத்து, செங்காவலர் தலைவர், மாக்ஸிசமும் இலக்கியமும் என்ற [illegible]களை எழுதியவர்.

பத்துக்கு மேற்பட்ட தமிழ்ச் சிறுகதைகளை ஆங்கிலத்திற்கு மொழிபெயர்த்து, **Illustrated Weekly Of India** மற்றும் உள்நாட்டு ஆங்கிலப் பத்திரிகைகளில் வெளியிட்ட பெருமைக்கு உரியவர்.



இலங்கையின் மற்றொரு சிறந்த விமர்சகரான றெஜி சிறிவர்த்தனாவின் ஆக்கங்களை 2 தொகுதிகளாக வெளியிட்டவர் அமரர் ஏ.ஜே கனகரத்னா.

பல இளம் எழுத்தாளர்களுக்கு வழிகாட்டியாகவும், ஆசானாகவும் அடக்கமான தொண்டு செய்த இவரை, அறிந்தவர்கள், நண்பர்கள், பத்திரிகையாளர்கள் ''ஏ.ஜே'' என்றே அழைப்பார்கள்.

கனடாவில் இருந்து வெளியாகும் ''காலம்'' இலக்கிய சஞ்சிகை ''ஏ.ஜே.சிறப்பிதழ் '' ஒன்றை வெளியிட்டிருந்தது. அந்நாட்டின் ''இலக்கியத் தோட்டம்'' அமைப்பு அவருக்கு ஐம்பதினாயிரம் ரூபா வழங்கிக் கௌரவித்தது. அவரது பூதவுடல் இறுதி அஞ்சலிகாக இன்று பொரளை ஏ.எவ்.றோமன்ஸ் மலர்சாலையில் வைக்கப்பட்டு, மாலை 5 மணிக்கு நல்லடக்கத்திற்காக ஜாவத்தை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

## பயன்தரு மரங்கள் நடுகை

தென்மராட்சி, ஒக்.12

சுற்றாடல் பாதுகாப்பு வாரத்தையொட்டி தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நேற்று பயன்தரு மரங்கள் நடப்பட்டன.

தேசிய மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அனுசரணையுடன் மரம் நடுகை நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

# குடாநாட்டுப் பாடசாலைகளில் நேற்றுமுதல் கல்விச் செயற்பாடுகள் முழு அளவில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக்.12

குடாநாட்டுப் பாடசாலைகளின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் நேற்றையதினம் முழுமையான அளவில் ஆரம்பமாகின.

சுமார் ஒன்றரை மாதகால இடைவெளியின் பின்னர் குடாநாட்டுப் பாடசாலைகளில் மாணவருக்கான கல்விச் செயற்பாடுகள் கடந்த திங்கட்கிழமை மீண்டும் ஆரம்பமாகின. எனினும், ஜி.சீ.ஈ. சாதாரண தர வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களுக்கான கல்விச்செயற்பாடுகளே ஆரம்பமாகும் என்பதால் கணிசமான மாணவர்களே அன்றையதினம் சமூகமளித்திருந்தனர்.

இந்த நிலையில், நேற்று ஆரம்ப வகுப்புகள் முதல் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு வரையிலான அனைத்து வகுப்புகளையும் சேர்ந்த கணிசமான மாணவர்கள் தத்தமது பாடசாலைகளுக்குச் சமூகமளித்திருந்தனர்.

யாழ். நகரப்பகுதியில் உள்ள பிரபல பாடசாலைகள் உட்பட அனைத்துப் பாடசாலைகளிலும் மாணவர் வரவு திருப்திகரமாக இருந்ததாகவும், தூர இடங்களில் இருந்தும் மாணவர்கள் சமூகமளித்திருந்ததாகவும் - அதிபர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில், தென்மராட்சி கிழக்கில் நேற்று திடீரென ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதையடுத்து, தென்மராட்சிப் பிரதேச பாடசாலைகளில் நேற்று மாணவர் வரவு குறைந்திருந்ததாக ஒரு தகவல் தெரிவித்தது.

(88-68-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. விதிக்கும் பொருளாதாரத் தடையால் ஈரானின் அணுசக்தித் திட்டங்கள் முடங்காது

## அந்நாட்டு ஜனாதிபதி சூளுரை

ஈரானுக்கு எதிராக ஐ.நா. விதிக்கும் பொருளாதாரத் தடைகளால் ஈரானின் அணுசக்தித் திட்டங்கள் எதுவும் முடங்கிப் போகாது என அந்நாட்டு ஜனாதிபதி முகமது அஹமட் நிஜாத் தெரிவித்தார்.

வடகொரியா கடந்த திங்களன்று தனது முதலாவது அணு ஆயுதச் சோதனையை நிலத்துக்கடியில் நடத்தியது. இதற்கு உலக நாடுகள் கண்டனங்களைத் தெரிவித்திருந்தன.

"வடகொரியா மீது உலக நாடுகள் புதிய புதிய தடைகளை விதிக்கவேண்டும். வடகொரியாவுக்குத் தண்டனை வழங்கவேண்டும்.

"இவ்வாறு தண்டனை வழங்கத் தவறும் பட்சத்தில் 'அணு ஆயுதப் பரம்பரைச்சட்டம்' வலுவிழந்து போய்விடும். இதனையடுத்து ஈரானும் அணு ஆயுதச் சோதனையில் ஈடுபட ஆரம்பிக்கும்" - என்று அமெரிக்கா தெரிவித்திருந்தது.

அத்துடன், அணு ஆயுதச் சோதனையில் ஈடுபடும் நாடுகள் மீது பொருளாதாரத் தடை விதிக்கவேண்டும்என்றும்அமெரிக்கா தெரிவித்திருந்தது.



இந்த நிலையிலேயே ஈரான் அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-


ஐரோப்பிய நாடுகளும், இதர மேற்கத்தேய நாடுகளும் ஈரானுக்கு எதிராக விதிக்கும் பொருளாதாரத்தடைகளுக்குப் பயந்து எங்கள் முடிவிலிருந்து பின்வாங்க மாட்டோம். எங்கள் மீது விதிக்கப்படும் தடைகளெல்லாம் வெற்றியையே குறிக்கும்.

கடந்த 27 ஆண்டுகளாக எங்களுக்கு எதிராக என்னவெல்லாம் செய்தார்களோ அதையேதான் இப்போதும் செய்து வருகிறார்கள். இதில் ஒன்றும் புதிதாக இல்லை. இந்தப் பொருளாதாரத்தடை மூலம் எங்களை ஒன்றும் செய்ய முடியாது. - என்றார் ஈரான் அதிபர்.

ஐ.நா. பாதுகாப்புச்சபையின் நிரந்தர உறுப்பு நாடுகளான பிரிட்டன், சீனா, பிரான்ஸ், ரஷ்யா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளும் ஈரானுக்கு எதிராக பொருளாதாரத் தடை விதிப்பது குறித்து இந்த வாரத்தில் பேச்சை ஆரம்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப் பேச்சில் ஜேர்மனியும் கலந்து கொள்கிறது. ஈரான் தனது அணுசக்தித் திட்டங்களை நிறுத்தாவிடில் அதன் மீதான பொருளாதாரத் தடை அமுலுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தங்களது அணுசக்தித் திட்டங்கள் அனைத்தும் நாட்டின் எரிசக்தித் தேவையை நிறைவு செய்யவே பயன்படுத்தப்படுகின்றன;அணு ஆயுதங்கள் தயாரிப்பதாகக் கூறுவதெல்லாம் தவறான தகவல்கள் என ஈரான் கூறி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



சீனாவின் உபிங் என்ற இடத்தில் 1,800 மீற்றர் உயரத்தில் சீன சாகச வீரர்கள் கயிற்றில் சைக்கிள் செலுத்திய சாகசக் காட்சி.

## வடகொரியா-2 ஆவது அணுச்சோதனை?

வடகொரியா இரண்டாவது அணுச்சோதனையை நேற்றுப் புதன்கிழமை நடத்தியிருக்கலாம் என்று ஜப்பான் ஒளிபரப்பு நிறுவனம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. இதனையடுத்து உலக நாடுகள் அதிர்ச்சியடைந்துள்ளன. இத்தகவல் உண்மையா என்பது குறித்து அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் ஆழமாக ஆராய்ந்துள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# சித்திரவதைத் தடயங்களோடு பாக்தாத்தில் 60 சடலங்கள் மீட்பு

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் சித்திரவதை செய்யப்பட்ட நிலையில் 60 பேரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன.

பாக்தாத்தில் தொடர்ந்து கடந்த சில நாள்களாக இவ்வாறு தொகை தொகையாக சடலங்கள் பொலிஸார் மற்றும் இராணுவத்தினரால் மீட்கப்படுகின்றன. கடந்த மாதம் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை மற்றும் கணனிப்பாகங்கள் விற்கும் நிலையமொன்றில் கடமையாற்றிய 50இற்கும் மேற்பட்டோர் இனந்தெரியாத ஆயுததாரிகளினால் கடத்தப்பட்டனர். அவர்கள் தொடர்பாக இன்னும் எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை.

இந்த நிலையிலேயே பாக்தாத் நகரில் 60 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இது குறித்து பொலிஸ் அதிகாரி லெப்டினன்ட் முகம்மது காயோன் கூறியதாவது:-

கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் சித்திரவதை செய்யப்பட்ட அடையாளங்களுடன் சடலங்கள் இருந்தன. இனவெறி கொலைப்படையின் செயல்தான் என்பது கொலை செய்யப்பட்ட விதம் உறுதி செய்கிறது. மேலும், இனவெறி கொலைப்படையினர் கொன்றதற்கான முத்திரை குத்தப்பட்டிருந்தன.

கொல்லப்பட்ட அனைவரும் 20 வயதிலிருந்து 50 வயதுவரை உள்ளவர்கள். இவர்களது சடலங்கள் பாக்தாத்தின் அருகேயுள்ள பல்வேறு பகுதிகளில் குவித்து வைக்கப்பட்டிருந்தன. இனவெறி கொலைப்படையினர் கடந்த சில மாதங்களில் ஆயிரக்கணக்கானோரைக் கொன்றுள்ளனர் - என்றார் அவர்.

# அமெ. மீது அணு ஆயுதத் தாக்குதல்; அச்சுறுத்துகின்றது வடகொரியா

"எங்கள் நாட்டின் மீதான அணு ஆயுதப் பிரச்சினைக்கு சுமுகத் தீர்வுகாண அமெரிக்கா முன்வரவேண்டும். வேறு வழியை அமெரிக்கா கையாளுமானால் அணு ஆயுதம் தாங்கிய ஏவுகணையை அதன் மீது வீசுவோம்" என்று வடகொரியா அறிவித்துள்ளது.

வடகொரியா கடந்த திங்களன்று தனது முதலாவது அணு ஆயுதச் சோதனையை நடத்தியது. இதனையடுத்து நேற்றும் இரண்டாவது அணுச் சோதனையை வடகொரியா மேற்கொண்டிருப்பதாக ஜப்பான் அறிவித்துள்ளது.

இந்த நிலையில், வடகொரியா அமெரிக்காவை எச்சரித்துள்ளது. இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது:-

வடகொரியாவு டனான மோதலுக்கு அமெரிக்கா சுமுக மான முறையில் தீர்வு காணவேண்டும். வேறு வழியில் தீர்வு காண முயன்றால் அமெரிக்கா மீது அணு ஆயுதம் தாங்கிய ஏவுகணையை வடகொரியா வீசும் என்று அந்நாட்டு அதிகாரி ஒருவர் கூறியுள்ளார் என சீனத் தலைநகர் பெய்ஜிங் கில் உள்ள யோங்காட் நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஆனால், அந்த அதிகாரியின் பெயர் என்ன என்பது குறித்தோ அல்லது எந்த இடத்தில் வைத்து அந்த அதிகாரி கூறினார் என்றோ அந்த நிறுவனம் செய்தி வெளியிட வில்லை.

"வடகொரியாவுடனான அணுஆயுதப் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வைக் காண வேண்டும். இல்லாவிட்டால் அந்த துரதிஷ்ட சம்பவத்தை அமெரிக்கா எதிர்கொள்ள நேரிடும்" என்று அந்த அதிகாரி மேலும் கூறினார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

"எங்களுக்குப் பாதுகாப்பு வேண்டும். எங்களது உணர்வுகளை வெளிக்காட்டுவதற்காகத்தான் நாங்கள் அணு ஆயுதத்திட்டத்தை நிறைவேற்றி வருகிறோம். அமெரிக்காவின் செயற்பாட்டைப் பொறுத்து எங்களது செயற்பாடும் இருக்கும்" என்றும் அந்த அதிகாரி கூறினார் என அந்தச் செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

# வெளியேற்றப்பட்டார் சதாம் நீதிபதியுடன் வாக்குவாதம்!

பாக்தாத், ஒக்.12

நீதிமன்றத்தில் நீதிபதி முகமது அல்-காலிபாவிடம் சதாம் ஹுசைன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டதையடுத்து அவர் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டார்.

1988ஆம் ஆண்டு ஈராக்கின் வடபகுதியில் உள்ள கிராமங்களில் குர்திஷ் இன மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். சதாம் உத்தரவின் பேரில் நடந்த இந்த படுகொலைச் சம்பவத்தில் 1,82,000 குர்திஷ் இன மக்கள் உயிரிழந்தனர்.

இது தொடர்பாக சதாம் மற்றும் 6 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை நடந்து வருகிறது. இதில் குர்திஷ் இனமக்கள் பலர் சதாமுக்கு எதிராக சாட்சியம் அளித்து வருகின்றனர்.



இந்த வழக்கில் சதாம் மற்றும் அவரது உறவினரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான அல்-ஹஸ்ஸன், அல்-மஜீத் இருவர் மீதும் படுகொலை வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது. மற்றவர்கள் மீது போர் குற்றவாளிகளாகவும், மனித உரிமைகளை மீறி செயற்பட்டனர் எனவும் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் ஈராக் அரசு குறுக்கிடுவதாகக் கூறி சதாம் உள்ளிட்ட குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் சட்டத்தரணிகள் நீதிமன்றத்தைப் புறக்கணித்துள்ளனர்.

இதையடுத்து, நீதிபதி முகமது அல்-காலிபா, நீதிமன்ற உத்தரவு மூலம் அவர்கள் சார்பில் வாதாட 7 சட்டத்தரணிகளை நியமித்துள்ளார்.

கடந்த சில தினங்களாக வாக்கு விசாரணையைப் புறக்கணித்து வந்த சதாம் ஹுசைன், செவ்வாய்க்கிழமை மீண்டும் விசாரணைக்காக நீதிமன்றம் வந்தார். அப்போது நீதிபதியிடம் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். மேலும் குர் ஆனின் வாசகத்தைப் படிக்கவும் அவர் முற்பட்டார். இதையடுத்து, கோபமடைந்த நீதிபதி அல்-காலிபா, சதாமை வலுக்கட்டாயமாக வெளியேற்ற உத்தரவிட்டார். சதாமுக்கு ஆதரவாகப் பேசிய ஹுசைன் ரஷீத் என்பவரும் வெளியேற்றப்பட்டார். பின்னர் நீதி விசாரணை தொடர்ந்து நடைபெற்றது.

அரச தரப்பினர் இராஜ துரோகி போல் செயற்படுகின்றனர் என ரஷீத் குற்றஞ்சாட்டினார். மற்றொரு விசாரணைக் கைதியான அல் - ஹஸ்ஸன் அல் - மஜீத், 'உடனடியாக மரண தண்டனை விதித்துத் தீர்ப்புக் கூறுங்கள், என்னைத் தூக்கிவிடுங்கள்' என்று ஆவேசமாகப் பேசினார்.

## தீவக ஆசிரியர் சங்கம் அங்குரார்ப்பணக் கூட்டம்

*காலம்:* 15.10.2006 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி
*இடம்:* யா/புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை.

**தீவக கல்வி வலயத்தைச் சார்ந்த அனைத்து ஆசிரியர்களையும் தவறாது பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

**அமைப்புக்குழுவினர்,**
**தீவக ஆசிரியர் சங்கம், தீவகம்.**

(54324)

## மரண அறிவித்தல்

### முருகர் இராசையா

*[ஓய்வுபெற்ற சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்]*

போயிட்டி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் முருகமூர்த்தி கோயில் வீதி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட முருகர் இராசையா நேற்றுமுன்தினம் (10.10.2006) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தங்கத்தின் அன்புக் கணவரும் யோகேஸ்வரி, சரஸ்வதி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான தியாகராசா, சேதுராசா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்றுமுன்தினம் (10.10.2006) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில நடைபெற்று பூதவுடல் சங்கானை கரைச்சி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முருகமூர்த்தி கோயில் வீதி,*
*சங்கானை.*

**தகவல்:**
**கி.தேவராசா (பேராமகன்).**

## உடன் தேவை

**பெண் விடுதி மேற்பார்வையாளர் தேவை.**
**வயது - 40 - 55**
**16.10.2006 பி.ப. ஒரு மணிக்கு தகுதியானவர்கள் நேரில் சமுகந்தரவும்.**

**அதிபர்**
யா/இராமநாதன் கல்லூரி,சுன்னாகம்.

## மரண அறிவித்தல்கள்

### வல்லிபுரம் விஸ்வலிங்கம்

சரவணையைப் பிறப்பிடமாகவும் கொஸ்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் விஸ்வலிங்கம் 01.10.2006 ஞாயிற் றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் வசந்தாரஞ்சினி (ஆசிரியை-கொழும்பு), மோகன் (ஆசிரியர்-கொஸ்லாந்து), காலஞ்சென்ற ஆனந்தன் ஆகியோரின் தந்தையும் காலஞ்சென்றவர்களான தங்கம்மா, அவயம்மா மற்றும் செல்லம்மா (திருநெல்வேலி), இரத்தினம் (நாரந்தனை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.10.2006 திங்கள் கொழும்பில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாரந்தனை வடக்கு*

(54322)

**தகவல்:**
**திரு.திருமதி முத்துலிங்கம்**

### வினாசித்தம்பி சிற்றம்பலம்



அம்பன் குடத்தனையைச் சேர்ந்த வினாசித்தம்பி சிற்றம்பலம் 10.10.2006 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் அன்னத்தின் (அன்னக்கிளி) அன்புக் கணவரும் வினாயகமூர்த்தி, கிருஸ்ணமூர்த்தி (சுவிஸ்), இராசமூர்த்தி(சுவிஸ்), கணேசமூர்த்தி, சுந்தரமூர்த்தி, சூரியமூர்த்தி, தேவமலர், தங்கமலர், புனிதமலர், இதயமலர் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கிருஸ்ணாநந்தி (பிரான்ஸ்), யோகரட்ணம் (பவா), ஜெனனி(சுவிஸ்), நந்தினி, நகுலராஜ், அஜிதா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(11.10.2006) புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் அம்பன் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அம்பன்,*
*குடத்தனை.*

(சி/5130)

**தகவல்:**
**சி.சுந்தரமூர்த்தி (மகன்).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



க.பொ.த. 2006 உயர்தரப் பரீட்சையில் கணிதப் பிரிவில் 3A பெற்று யாழ். மாவட்டத்தில் முதலாவது இடத்தினையும் அகில இலங்கை ரீதியில் ஒன்பதாவது இடத்தினையும் பெற்று எமது கல்வித் தாயான யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிக்குப் பெருமை தேடித் தந்த

**செல்வன்**
**குமாரசாமி கணேஷானந்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கணித, விஞ்ஞான, கலை, வர்த்தகப் பிரிவில் அதிசிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத்தந்த கல்லூரியின் ஏனைய மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர், ஊழியர் நலன்புரிச் சங்கம்
யா/ உடுப்பிட்டி அமெரிக்கன்
(54307) மிஷன் கல்லூரி, வல்வெட்டித்துறை



## யாழ்ப்பாணம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ.து.)

# பதவி வெற்றிடம்

பதவி - பொதுமுகாமையாளர்
பதவிகுறியீடு - 101/8
சம்பளத்திட்டம் - 5250 - 7750 / 120 x 10 -130 x10 (31/99 சுற்று நிருபப்படி)

வயது - 18- 45
பால் - ஆண்/ பெண்
கல்வித்தகைமை:

அ) கூட்டுறவுப் பணியாளர் 09 ஆவது சம்பளத் திட்டத்தில் முகாமை/ மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 03 வருடத்திற்கு குறையாத அனுபவம்/ 10 ஆவது சம்பளத்திட்டத்திலான பதவியில் மேற்குறித்த வண்ணம் 06 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டத்துடன் அல்லது இணையான பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ தொழில் ஸ்தாபனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 04 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் (உ/த.சித்தி)/ க.பொ.த.(உ/த) 03 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ தொழில் ஸ்தாபனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 06 வருடத்திற்கு குறையாத அனுபவம்

விண்ணப்ப முடிவுதிகதி - 27.10.2006

குறிப்பு:

1. மேற்குறிப்பிட்ட பதவிக்கு கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு சுற்றுநிருபங்களுக்கு அமைவாக ரூபா 1250/= , ரூபா 2500/= சேர்த்து வழங்கப்படும்.
2. வயதெல்லையில் கூட்டுறவுச் சங்கப் பணியாளருக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை தங்கள் சங்கங்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும்.
3. விண்ணப்பங்கள் யாவும் சுயமாகத் தயாரித்து பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும்.

அனுப்பவேண்டிய முகவரி:
தலைவர்,
யாழ்ப்பாணம், ப.தெ.வ.அ.கூ.சங்கம்,
330, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

பொதுமுகாமையாளர்.

(சி-51125)


## மீண்டும் பாவனைக்கு வந்துள்ள சிக்கன விளக்கு

தென்மராட்சி கிழக்கு,ஒக்.12

சாவகச்சேரி சந்தை விற்பனை நிலையங்களில் தற்சமயம் சிக்கன விளக்கு விற்பனைக்கு வந்துள்ளது. இச் சிக்கன விளக்கு முன்பும் மண்எண்ணெய்க்கு தட்டுப்பாடான காலகட்டத்தில் பயன்பாட்டில் இருந்துவந்தது. தற்சமயம் மண்எண்ணெய்க்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதனால் மீண்டும் இவை விற்பனைக்கு வந்துள்ளன.

இவ்விளக்கிற்கு மிகச் சிறிய அளவிலேயே மண்எண்ணெய் பயன்படுத்தப்படுகின்றது என்பதுடன் வறிய மக்களுக்கு இது ஒரு வரப்பிரசாதம் போல் உதவுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ப-122)

## நான்காம் கட்ட உணவுப்பொருள் விநியோகம்

தென்மராட்சி, ஒக்.12

தென்மராட்சி பிரதேச பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக் கடைகளில் நான்காம் கட்ட உணவுபொருள்கள் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் வழங்கப்பட்டு வருகிறன.

அனைத்துக் குடியிருப்பாளர்களும் பணம் செலுத்தி பொருள்களைப் பெற்றுக்கொள்ளலாம் எனஅறிவிக்கப்பட்டுள்ளது.

## அல்லாரை வாசிக்கு ஒரு லட்சம் பரிசு

தென்மராட்சி, ஒக்.12

தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரி கிளையில் 'சுப்பர் வண் பிப்டி பரிசூரிய' சான்றிதழ் பெற்ற அல்லாரை வாசிக்கு ஒரு லட்சம் ரூபா பரிசு கிடைத்துள்ளாதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொடிகாமம், அல்லாரை தெற்கைச் சேர்ந்த நடேசபிள்ளை தனபாலசிங்கம் என்பவருக்கே இப்பரிசு கிடைத்துள்ளது.

150 நாள்களில் முடிவுறுத்தும் நிலையில் 10 ஆயிரம் ரூபா செலுத்தி சான்றிதழ் பெறும் பரிசூரியத் திட்டத்திலேயே பரிசு கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(202)

## சிறப்புற நடைபெற்ற அஞ்சல் தின நிகழ்வு

தென்மராட்சி, ஒக்12

உலக அஞ்சல் தினத்தையொட்டி சாவகச்சேரி அஞ்ச அலுவலகத்தில் கடந்த திங்கட்கிழமை நிகழ்வுகள் நடைபெற்றன.

அஞ்சல் திணைக்கள கொடியினை அஞ்சல் அதிபர் திருமதி எஸ்.அரியரத்தினம் ஏற்றிவைத்து நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார்.

அஞ்சல்அலுவலகபிரதி அஞ்சல் அதிபர் பொ.தெய்வேந்திரன் அஞ்சல் தினத்தையொட்டி மரக்கன்றினை நாட்டினார்.இந்நிகழ்வில் அஞ்சல் அலுவலக உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் பொதுமக்களும் கலந்துகொண்டனர். (202)


**வாடகைக்கு**

இல.84, கச்சேரி நல்லூர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தில் [நாச்சி அம்மன் கோயிலுக்கு முன்பாக] 5 அறைகள் கொண்ட சகல வசதிகளுடனும் கூடிய [illegible] வீடு வாடகைக்கு உண்டு. அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: திருமதி கமலாதேவி கனகசபை,
இல.84, கச்சேரி நல்லூர் வீதி,நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 3280



## C.V. வேலுப்பிள்ளையின்
# வீடற்றவன் நாவலின்
கதைச்சுருக்கம் - விளக்கம் - விமர்சனம்



**கலாபூசணம் அராலியூர்**
**ந.சுந்தரம்பிள்ளை எழுதியது**
இரண்டாம் பதிப்பு (54293)



## காமராஜர் பல்கலைக்கழகம்(மதுரை)
**B.Sc., B.A., B.com., B.B.A.**

★ பல்கலைக்கழகத்தினால் இவற்றுக்குரிய பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
★ A/L இல் ஒரு பாடம் சித்தி அடைந்தவர்களும் இப்பாட நெறியினை பதிவு செய்து கொள்ளலாம்
★ இப்பாடநெறிகளுக்குரிய பட்டங்கள் யாவும் இலங்கைப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.
★ இவற்றுக்குரிய பதிவுகள் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.
★ பரீட்சைகள் யாவும் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

குறிப்பு: B.Sc. இற்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன.

புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,யாழ்ப்பாணம்.
தொ.பே.: 222 3208, 222 8148

யாழ். இணைப்பாளர்
காமராஜர் பல்கலைக்கழகம்.

(53584)


## தசாக கிருஹயக்ஞ அழைப்பு



நிகழும் விய வருஷம் புரட்டாதி மாதம் 18 ஆம் திகதி (04.10.2006) புதன்கிழமை இறைவன் திருப்பாதமடைந்த

**அமரர் தவளாம்பிகை அம்மா** (தவம்)

அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறவிருப்பதால் மேற்படி கிரியைகளில் பங்குபற்றி அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் சமாராதனையிலும் (மதிய போசனம்) கலந்துகொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

13.10.2006 வெள்ளிக்கிழமை பகல் 11 மணிக்கு தசாகம் (கல்லெடுப்பு) 16.10.2006 திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு கிருஹயக்ஞம் (மதிய போசனம்)

அரசகேசரிப் பிள்ளையார் கோயில் வீதி,
நீர்வேலி.

குடும்பத்தினர்.

(54317)

## முதலாம் வருட நினைவுகள்



சேர்ப்பு
28-09-1947
விடுப்பு
12-10-2005

**அமரர் கணபதி இராசதுரை**

(முன்னாள் அதிபர் யாழ். மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்)

என்பா யிருந்த மத்தியத் தாய்
பொன்போ லுயர வழி சமைத்த
நம்போ லதிப ரெப ரையுமே
நம்தாய் மத்தி கண்ட தில்லை
நித்தியம் நீர் தந்த பொற்காலம்
உத்தமர் இந்நாள் உரைக் கின்றார்
எத்தர்கள் எதையு மியம் பட்டும்
வித்தாய் நீரே விதைத் துள்ளீர்
அத்தனே வாழி பார ணடியில்.

கல்விசாரா ஊழியர்கள்
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

(54316)


# COMPUTER EXPRESS
**Institute of Information Technology**
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-222 8250,0777- 222422

## மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2006

பதிவுகளிற்கு முந்துங்கள்

**80% OFF**

| பாட நெறிகள் | | | செலுத்தவேண்டிய கட்டணம்(20%) |
|---|---|---|---|
| Diploma in computer Science | - 4மாதம் | [illegible] | 1,650 |
| Honours Diploma in Computer Science | - 5மாதம் | [illegible] | 2,100 |
| Diploma in Web Page Designing | - 4 மாதம் | [illegible] | 1,650 |
| Diploma in Graphic Designing | - 4 மாதம் | [illegible] | 1,650 |
| Diploma in Desk top Publishing | - 4 மாதம் | [illegible] | 1,450 |
| Diploma in Hard Ware Engineering | - 3 மாதம் | [illegible] | 1,450 |
| Accounting Package | - 3 மாதம் | [illegible] | 1,650 |
| Diploma in AutoCAD | - 3 மாதம் | [illegible] | 1,450 |
| MS Office | - 3 மாதம் | [illegible] | 1,000 |

**50% Off**
**Advances Courses**

Diploma in Video Editing [illegible] 3250
Diploma in Multimedia [illegible] 2750

வகுப்புக்கள் ஆரம்பம் :-
Batch I - 14/10/2006
Batch II - 15/10/2006
Batch III - 18/10/2006
Batch IV -20/10/2006

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.
சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்,வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி.

3 மாதகால Diploma in Computerized Accounting & Tally புதிய [illegible]
ஆரம்பம். Batch I :- 14/10/2006, Batch II :- [illegible]


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



நல்லை மண்ணோடும் மரபோடும்
ஒட்டி உறவாடிய மணிவாசகர்
பெற்றெடுத்த மாண்புமிகு குணசீலன்

மண்ணில்
26 - 08 - 1953
விண்ணில்
23 - 09 - 2005

**அமரர்**
**மாணிக்கவாசகர் சிற்சபேசன்**

**திதி: 12.10.2006**

ஆண்டு ஒன்று ஒடிமறைந்தாலும் ஆறிடுமோ எமதுயரம் அப்பா!
கண்களில் நீர்வடிகிறது அப்பா! ஆனால், துடைப்பதற்கு - உங்கள்
கைகள் தானில்லை அப்பா! சொல்வதற்கு செய்திகள் நிறைய இருக்கிறது அப்பா!
கேட்பதற்கு உங்கள் காதுகள்தான் இல்லை அப்பா....
எம் உயிர் உள்ளவரை ஆறாது எம்துயரம்
நீங்காது உங்கள் நினைவுகள்....

எமது தந்தையின் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

இல.07, செட்டித்தெரு,
நல்லூர்.

(54306)

தங்கள் நினைவில் வாழும்:
மனைவி, பிள்ளைகள், மருமகன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசாதாரண சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர் விவரம் திரட்டப்படுகின்றது

## விரைவில் நடவடிக்கை என்கின்றார் உதவிப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம்,ஒக்.12

தற்போதைய அசாதாரண சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட குடாநாட்டு கடற்றொழிலாளர்களின் விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன. அவை முழுமையாக இந்த வார இறுதிக்குள் திரட்டப்பட்டு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கையளிக்கப்படும்.

இவ்வாறு கடற்றொழில் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட உதவிப் பணிப்பாளர் கே.தர்மலிங்கம் 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

குடாநாட்டில் கடந்த 2 மாதங்களாக ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையால் கடற்றொழிலாளர்கள் பெரும் பாதிப்படைந்துள்ளனர். அவர்களின் தொழில் உபகரணங்களுக்குப் பெரும் நஷ்டமும் ஏற்பட்டுள்ளது. அவர்களுக்கு உதவுவதற்கு நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படுகின்றதா எனக் கேட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்:-

குடாநாட்டின் அசாதாரண சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு அரச அதிபரின் ஏற்பாட்டில் நிவாரணப் பொருள்கள் வழங்கப்படுகின்றன.

கடற்றொழிலாளர்களின் பெரும் எண்ணிக்கையான தொழில் உபகரணங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதற்கான தொழில் இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளில் தற்போது ஈடுபட்டுள்ளோம்.

குடாநாட்டிலுள்ள 117 கடற்றொழில் சங்கங்களிடமிருந்தும் இழப்பீடு தொடர்பான விவரங்களைத் திரட்டி வருகின்றோம். விவரங்கள் முழுமையாக வந்து சேர்வதிலே தாமதம் ஏற்பட்டது. ஆயினும் இந்த வார இறுதிக்குள் முழு விவரமும் திரட்டப்பட்டு புள்ளிவிவர அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுவிடும். உடனடியாக அவை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்-என்றார். (202)

## தேங்காயின் விலை 60 ரூபாய் வரை உயர்வு!

யாழ்ப்பாணம்,ஒக்.12

யாழ்.நகரப் பகுதியில் உள்ள சந்தைகளிலும், தனியார் கடைகளிலும் தேங்காயின் விலை அதிகரித்துள்ளது. சாதாரண அளவான தேங்காய் ஒன்று அறுபது ரூபாவரை விலை போவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

நாற்பது ரூபாய்க்கு விற்கப்படும் தேங்காய்கள் இளசாகவும் - கறிக்குப் பயன்படுத்த முடியாதவையாகவும் இருப்பதாகப் பாவனையாளர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

தென்மராட்சியிலிருந்து தேங்காய் கொண்டு வரப்படுவது தடைப்பட்டிருப்பதும், தீவுப் பகுதியிலிருந்த தேங்காய் எடுத்து வருவதற்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளமையும் - விலை உயர்வதற்கான பிரதான காரணங்களாகும் என்று கூறப்படுகின்றது. (ப-88)

## வரணிப் பகுதி இப்போதைக்கு பழைய நிலைக்குத் திரும்பும் சாத்தியமில்லை

தென்மராட்சி கிழக்கு,ஒக்.12

வரணிப் பிரதேசம் மீண்டும் பழைய நிலைக்கு திரும்பும் சாத்தியம் இப்போதைக்கு ஏற்படாதென்று கருதப்படுகின்றது. வரணி பொதுச் சந்தைப் பகுதியில் சுமார் 15 இற்கும் மேற்பட்ட வர்த்தக நிலையங்கள் இன்று வரை மூடப்பட்டுள்ளன. வரணி மகா வித்தியாசாலை சுற்றாடலிலும் வர்த்தக நிலையங்கள் தொடர்ந்தும் மூடப்பட்டுள்ளன.

வரணி மகா வித்தியாலயம் தொடக்கம் வரணி மத்திய சந்தை வரையான பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் குடியிருப்புகளில் இருந்து வெறியேறி வேறு இடங்களில் வசித்து வருகின்றனர். 24 மணி நேரமும் இப் பகுதிகளில் பாதுகாப்பின் நிமித்தம் படையினர் நிலைகொண்டுள்ளமையாலும் அதிக ஷெல்கள் இப் பகுதிகளிலேயே வீழ்ந்து வெடிப்பதனாலும் மக்கள் இப் பகுதியில் உள்ள தமது வீடுகளில் திரும்பிவந்து குடியமர விரும்பவில்லை என கூறப்படுகின்றது. இப் பகுதிகளில் உள்ள வரணி மத்திய மருந்தகத்தின் அண்மையில் ஷெல் ஒன்று வீழ்ந்து வெடித்ததினால் அங்கே கடமைபுரியும் ஊழியர்கள் அச்சத்துடனேயே கடமைக்கு சமூகமளிக்கின்றனர்.

இப் பிரதேசத்தில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனங்கள், சமுர்த்தி வங்கி, பொது நூலகம் என்பனவும் இயங்க வில்லை. இப் பகுதியின் உட்புறமாக உள்ள அயல் கிராமங்களில் வசிப்போர் இதனால் நெல்லியடி அல்லது கொடிகாமத்துக்குச் சென்றே தமக்கு தேவையான பொருள்களை கொள்வனவு செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. (ப-122)

## விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிக்கு மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை

அச்சுவேலி, ஒக்.12

ஜீ.சி.ஈ. சாதாரண தரம் 2006 பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு செய்ய விரும்புவோர் உரிய முறையில் பாடசாலை அதிபர்கள் ஊடாக ஒரு தடவை விண்ணப்பித்தால் போதும். இரண்டாம் தடவை விண்ணப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை.

ஜீ.சி.ஈ. சாதாரண தர பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு பரீட்சைத் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பப் படிவம் வந்து சேராமையினாலும் விண்ணப்ப இறுதித் தினம் செப்ரெம்பர் மாதம் என அறிவிக்கப்பட்டிருந்ததாலும் போட்டோ ஸ்ரட் பிரதி செய்யப்பட்ட விண்ணபத்தில் முற்கூட்டியே பலர் விண்ணப்பித்து விட்டனர்.

தற்பொழுது அவர்களுக்குரிய குறியீட்டு இலக்கம் பொறிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் தபால் மூலம் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு வந்து சேர்வதாலும் விண்ணப்பிக்க வேண்டிய இறுதிக் காலம் ஒக்ரோபர் 30 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டிருப்பதாலும் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் இரண்டாம் தடவையும் உரிய படிவத்தில் விண்ணப்பித்து வருகின்றனர்.

உரிய தகவல்களை உள்ளடக்கி முதற்றடவை விண்ணப்பித்திருந்தால் 2ஆம் தடவை விண்ணப்பங்களை அனுப்பிவைக்க வேண்டிய அவசியம் இல்லை எனக் கொழும்பில் பரீட்சைத் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ப)

## கௌரிவிரதப் பூஜைகள்

நீர்வேலி,ஒக்.12

நீர்வேலி காமாட்சி அம்பாள் ஆலயத்தில் கேதார கௌரி விரத பூஜைகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

தினமும் காலையில் அர்த்த நாரீஸ்வரருக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும் பூசை வழிபாடுகளும் நடைபெற்று வருகின்றன. எதிர்வரும் 21ஆம் திகதி தீபாவளி தினத்தன்று விசேட உற்சவத்துடன் நிறைவேறும்.

நீர்வேலியில் முதன்முதலாக அர்த்தநாரீஸ்வரர் பிரதிஸ்டை பண்ணப்பட்டதும் அர்த்தநாரீஸ்வரர் வழிபாடு மேற்கொள்ளப்படுவதும் அர்த்தநாரீஸ்வரருக்கு உற்சவம் நடைபெறுவதும் இவ்வாலயத்தில்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

கௌரி விரதத்தையொட்டி முதல் நாளன்று கேதார கௌரி விரதத்தின் சிறப்புக்கூறும் பாடல்கள் கொண்ட நூல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. (ப-110)

## திருவிளக்குப் பூசை

தென்மராட்சி கிழக்கு,ஒக்.12

கரணவாய் கிழக்கு உச்சில் புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் கடந்த பூரணை தினத்தன்று திருவிளக்கு பூசை வழிபாடு இடம் பெற்றது. அன்றைய தினம் வழமையான மாலைப் பூசைக்கு பின்பு அம்பாள் வீதியுலா வந்து அமர்ந்த பின்பு திருவிளக்கு பூசை இடம்பெற்றது. பூசையில் நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் கலந்தகொண்டு விளக்கு ஏற்றி வழிபாடு செய்தனர். (ப-122)

## யு.என்.டி.பி. உதவியுடன் மூவாயிரம் சிறிய நாட்டுக் கோழிப் பண்ணைகள்

வடமராட்சி,ஒக்.12

யாழ்.மாவட்டத்தில் மூவாயிரம் சிறிய நாட்டுக் கோழிப் பண்ணைகள் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனத்தின் (யு.என்.டி.பி) உதவியுடன் அமைக்க யாழ்.பிராந்திய சுகாதார கால்நடை உற்பத்தித் திணைக்களம் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

வீடுகள் தோறும் 5 தொடக்கம் 10 வரையான நாட்டுக் கோழிகளையும் அதற்கான கூடுகளையும் வழங்கி நாட்டுக்கோழி வளர்ப்பை ஊக்குவிக்கத் திட்டமிடப்பட்டு இதற்கான உதவிகோரி ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மூவாயிரம் வீடுகளில் இவ்வாறான நாட்டுக் கோழிப் பண்ணைகளை உருவாக்குவதன் மூலம் முட்டைகளின் தேவை பூர்த்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ப)

# குடாநாட்டுப் பாடசாலைகள் சிலவற்றின் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.12

கடந்த 6ஆம் திகதி வெளியிடப்பட்ட ஜி.சீ.உயர்தரப் பரீட்சையின் முன்னணிப் பெறுபேறுகளின் விவரத்தை சம்பந்தப்பட்ட கல்லூரியின் அதிபர்கள் 'உயதனு'க்கு அனுப்பி வைத்துள்ளனர். அவற்றில் சில வரு மாறு:-

### சென்.பற்றிக்ஸ் கல்லூரி

**கலை**

ஏ.துஸ்யந்தன் - 3ஏ (மாவட்ட நிலை 5), ஆர்.ஓ.ரெரன்ஸ் - 3ஏ, ஜே.எம்.யூடிக்குமரன் - 3ஏ, வி.கோவர்த்தன் -2ஏ பி, எஸ்.எவ்.மகிந்தன் - 2ஏ பி, எஸ்.ஜே.சுரேந்திரராஜா - 2ஏ பி, ஏ.ஆர்.றொட்ணி பிரசாந் - 2ஏ சி, ஏ.ஜெபராஜ் - ஏ 2பி, ஏ.சியான்ஸ்ரன் ஜெனிஸ் - ஏ 2பி,

**வணிகம்**

ஆர்.நிசாந்தன் - 3ஏ, ஏ.டினேஸ்ராஜ் ஏ 2பி, கே.பி.சுஜாகரன் - ஏ 2பி, ஆர்.எரிக்சனுஜன் - 2ஏ பி.

**உயிரியல்**

பி.ரிசாந்தன் - 2ஏ பி, ஜே.என்.பற்றிக் அமலரூபன் - ஏ 2பி, ஜே.ஜெயகாந்தன் 2பி சி.

**கணிதம்**

ரி.திவாகர் - 3ஏ (மாவட்டநிலை 3), எஸ்.ரூபன் - 2ஏ பி, ரி.நிமல்ராஜ் 2ஏ சி, எஸ்.எஸ்.கமில்ரன் - 3பி, டபிள்யூ. விநோத் ஏ பி சி, ஏ.வை. கலிஸ்ரன் கஜேந்திரன் - 3 பி, பி.ஜே.எம்.சாள்ஸ் - ஏ 2பி,

### தெல்லிப்பழை யூனியன் கல்லூரி

**கணிதம்**

தே.கவிதாஸ் - 2ஏ பி, து.சிந்திகா - ஏ 2பி, ச.கார்த்தீபன் - ஏ பி சி, ம.கஜந்தன் - ஏ 2சி, த.பிரசாத் - பி 2சி, த.தறோபன் - பி 2சி.

**விஞ்ஞானம்**

அ.ருஷாந்தினி - பி 2சி.

**வணிகம்**

க.சுரேந்திரன் ஏ 2பி, மு.நிந்துஜா - 2ஏ சி, து.தர்மதா - ஏ பி சி, பா.ஜெனட் சுதர்சினி- ஏ பி சி, த.தயாளவன் - ஏ 2சி.

**கலை**

வி.ஜீவிகா - 3ஏ, பூ.சுயந்தன் - 3ஏ, ம.மதுரா - 2 ஏ பி, யோ.காயத்திரி - 2ஏ பி, இ.ஸ்ரீபன் 2ஏ பி, நி.துஷ்யந்தன் - ஏ 2பி, த.பவீந்திரன் - 2ஏ சி, மு.நிலானி - 2ஏ சி, ச.சயிதா - 2ஏ சி, சி.நந்தினி - ஏ 2பி, சு.யூட் திலீபன் - ஏ பி சி, க.சஞ்சுதன் ஏ பி சி, மு.தனுசானந்தன் - ஏ பி சி, ஆ.சோபனா - ஏ பி சி, அ.அமன்டாமேரி ஏசியூலா - ஏ பி சி, அ.திஷானி - ஏ பி சி, மு.மொனிக்கா - 3 பி, ச.இளமதி ஏ 2சி.

### யா/இந்து மகளிர் கல்லூரி

**உயிரியல்**

ம.சோபனா - 3ஏ (மாவட்ட நிலை 9), சீ.ருசாந்தினி - 3ஏ (மாவட்ட நிலை 16), க.சரிதா - ஏ 2பி, ம.நிலக்ஷி - 3 பி, ந.ஜயந்தி- 2பி சி, செ.சோபிகா - ஏ 2பி.

**கணிதம்**

ஸ்ரீ.சகிர்தா - ஏ 2சி, த.திலீபா - ஏ பி சி.

**வர்த்தகம்**

க.துளசி - 3ஏ (மாவட்ட நிலை 4), து.கலாவதி - 2ஏ பி, க.விஜித்தா - 2ஏ பி, தி.பிருந்தாஜினி - 2ஏ பி, த.கோசலாதேவி- 2ஏ சி, ர.மயூரதி - ஏ 2பி, ர.மீனாம்பிகை - ஏ 2பி, சி.சகிலா - ஏ 2பி, கு.சிந்துஜா - ஏ பி சி, சி.பிரசாந்தி - ஏ 2பி.

**கலை**

மு.பிருந்தா - 2ஏ பி, கோ.நர்மதா - 2ஏ பி, ந.காயத்திரி - 2ஏ பி, சே.மிதிலா - 2ஏ பி, நா.அஜந்தா - 2ஏ பி, ஜெ.குகன்ஜா - 2ஏ பி, லோ.கோகுலவாணி - 2ஏ சி, வே.கிருத்திகா - ஏ 2பி, ச.கந்ததர்சினி - ஏ 2பி, ஜெ.நதியா - ஏ 2பி.

### அச்சுவேலி புனித தெரேசா மகளிர் கல்லூரி

**கலை**

து.தசோனியா - 3ஏ, பி.அகல்யா - 2ஏ பி, சி.சௌந்தரி - ஏ பி சி

### சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

**கலை**

மா.சுபாஸ்கரன் - 2ஏ சி, ந.தீபருக்ஷன் - 2ஏ எஸ், கு.சசிக்குமார் - ஏ 2சி, சி.பிருந்தா - ஏ 2சி.

**வணிகம்**

சோ.பிருந்தா - 2ஏ பி, மு.கீத்தா - ஏ சி எஸ்.

### மீசாலை வீரசிங்கம் ம.வி.

**வர்த்தகம்**

சீ.தினேஷன் - 3ஏ, க.மயூரன் 2ஏ பி, பு.நவஜீதா - ஏ 2பி, ஜெ.கஜன் - ஏ 2பி.

**கலை**

தெ.நிரஞ்சனா - 2ஏ பி, ஜெ.நிவேதிகா - ஏ 2பி, சு.வினோஜா - ஏ பி சி, ஞா. உதயரூபினி - ஏ பி சி.

### திருக்குடும்ப கன்னியர் மடம்

**விஞ்ஞானம்**

கி.நிஷா-3ஏ, றொ.அலன் சுரமியா-2ஏ பி., அ.சமிக்கா - ஏ 2சி, யோ.துஷ்யந்தி ஏ 2சி, தி.சிந்துஜா 2பி சி.

**வர்த்தகம்**

ச.கிருத்திகா -3ஏ, த.பவுத்திரியா-ஏ 2பி, வி.நொறின் ஷியாந்தி-ஏ 2பி

**கலை**

செ.மாதங்கி - 3ஏ, அ.சைலேந்தினி - 3ஏ, க.நிருசிகா - 2ஏ பி, நா.மேரி றெஜீனா கிறிஸ்ரீன் - 2ஏ பி, யோ.பெனி றேமன்ட் - 2ஏ பி, சு.நித்தியா - 2ஏ பி, அ.சிறோமி - 2ஏ பி, பீ.தனுசா சாந்தி - 2ஏ பி, ஜே.சுயானி - 2ஏ பி, ப.நர்மதா - 2ஏ பி, செ.நெ.எ.லோஜினி - 2ஏ சி, ஆ.நிருசியா-2ஏ சி, கு.அமலராணி - ஏ 2பி, ந.நதீபா - ஏ 2பி, பா.மானல் மிருசுசாந்தி - ஏ 2பி, செ.சுகன்யா - ஏ 2பி, ஜோ.மேரி றொக்ஸி - ஏ 2பி, ஜெ.நிலக்சனா - ஏ 2பி, லெ.ஆன் கொலஸ்ரிக்கா - ஏ 2பி, றொ.மேரி ஷியானா - ஏ 2பி, செ.ஆன்சலின் - ஏ 2பி, ச.மேரி றொசாணி - ஏ 2பி, தே.அனிற்றா கிரிசாந்தி - 3பி. (203)

## யூனியன் கல்லூரியை சொந்த இடத்தில் இயக்க அனுமதி

யாழ்ப்பாணம்,ஒக்.12

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, தந்தை செல்வா தொடக்க நிலைப் பாடசாலை ஆகியவற்றை உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள சொந்த இடத்தில் இயக்குவதற்கு படைத்தரப்பு அனுமதி வழங்கியுள்ளதாக யூனியன் கல்லூரி அதிபர் எஸ்.புண்ணியசீலன் அறிவித்துள்ளார்.

## லயன்ஸ் கழகம் உதவி

சிறுவர், முதியோர் தினத்தை முன்னிட்டு வதிரி பரமானந்தா ஆச்சிரமத்தில் தங்கியுள்ள சிறுவர்கள், முதியோர்களுக்கு வடமராட்சி லயன்ஸ் கழகம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மதிய உணவை வழங்கியது.

அத்துடன் முதியவர்களுக்கு துவாய்களும் வழங்கப்பட்டன. (202)

## தாவடியில் கூட்டுறவுக் கடை உடைத்துத் திருட்டு

தாவடிச் சந்தியில் உள்ள ப.நோ.கூ. சங்கக் கிளையொன்றில் இருந்து ஊரடங்குச் சட்ட வேளையில் சீனி, பருப்பு போன்ற பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கத்தின் தாவடிக் கிளையின் பின்புறக் கதவு உடைக்கப்பட்டு இப் பொருள்கள் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு மூடை சீனி, இரண்டு மூடை பருப்பு என்பவையே திருட்டுப்போயுள்ளதாகவும் இது சம்பந்தமாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் கிளை முகாமையாளரினால் முறைப்பாடொன்றும் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பொதுவாக சங்கக்கடைகளில் சீனி [illegible] கள் அதிகளவில் களவாடப்பட்டு [illegible] றமையும் இந்தக் களவுகளின் [illegible] சமூக விரோத குற்றச் செயல்களில் [illegible] பவர்களே அதிகளவில் காணப்படுவதாகவும் கூறப்படுகின்றது. (202-68)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரங்க மீண்டும் சதம் இலங்கையணி வெற்றி

அஹமதாபாத், ஒக்.12

தரங்க, சங்ககாரவின் கலக்கலான ஆட்டம் கைகொடுக்க, இலங்கை அணி, சிம்பாப்பேக்கு எதிரான தகுதிச் சுற்று ஆட்டத்தில் 144



ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. முதல் ஆட்டத்தில் சதம் அடித்த தரங்க, 110 ஓட்டங்களை விளாசி தொடரின் இரண்டாவது சதத்தைப் பெற்றார். இவருக்கு நல்ல ஒத்துழைப்பு கொடுத்த சங்ககார 80 ஓட்டங்கள் குவித்தார். இவ் ஆட்டத்தில் தோல்வி அடைந்ததன் மூலம் மினி உலகக் கிண்ணத் தொடரின் முக்கிய சுற்றுக்கு தகுதி பெறும் வாய்ப்பை சிம்பாப்வே இழந்தது.

மினி உலகக் கிண்ணத் தொடரின் மூன்றாவது தகுதிச் சுற்று ஆட்டத்தில் இலங்கை, சிம்பாப்வே அணிகள் நேற்றுமுன்தினம் அஹமதாபாத்தில் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் இழப்பிற்கு 285 ஓட்டங்களைக் குவித்தது. ஆரம்ப வீரரான ஜெயசூரியா 9 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் 'ரன் அவுட்' ஆனார். அடுத்து களமிறங்கிய அணித் தலைவர் ஜெயவர்த்தன(4), விரைவில் வெளியேற சங்ககார களமிறங்கினார். மூன்றாவது விக்கெட்டில் ஜோடி சேர்ந்த சங்ககார, தரங்க ஆகியோர் பொறுப்புடன் ஆடி 165 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றனர். அபாரமாக ஆடிய சங்ககரா ஒரு நாள் அரங்கில் தனது 34 ஆவது அரைச் சதத்தைக் கடந்தார்.

இத்தொடரின் முதல் ஆட்டத்தில் சதம் அடித்து அசத்திய தரங்க, இவ் ஆட்டத்திலும் சதம் அடித்து அமர்க்களப்படுத்தினார். 120 பந்துகளை சந்தித்த தரங்க 12 பவுண்டரிகள், ஓர் சிக்சர் உட்பட ஒருநாள் அரங்கில் தனது ஆறாவது சதத்தைப் பதிவு செய்தார். 110 ஓட்டங்கள் சேர்த்த அவர், மட்சிகென்யேரி சுழலில் 'போல்ட்' ஆனார். அவுட்டானார். அவரை தொடர்ந்து சங்ககரா(80), சிபாபாவின் பந்துவீச்சில் வெளியேறினார். அடுத்து களமிறங்கிய அத்தபத்து பொறுப்புடன் ஆடினார். இவருக்கு டில்சான்(6), மஹ்ரூப் (13), முரளிதரன்(10) ஒத்துழைப்புக் கொடுக்கத் தவறினார். 50 ஓவர்களின் முடிவில் இலங்கை அணி, 7 விக்கெட் இழப்புக்கு 285 ஓட்டங்கள் எடுத்தது. அத்தபத்து(33), மலிங்கா (5) ஆகியோர் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

கட்டாயம் வெற்றி பெற வேண்டும் என

## விளையாட்டு

களமிறங்கிய சிம்பாப்வே மீண்டும் ஒரு முறை சொதப்பியது. மஸகட்சா(30), ரெய்லர்(30) ஓரளவு ஓட்டங்கள் சேர்த்தனர். அணித் தலைவர் பொறுப்புடன் விளையாடி உற்சயா 20 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந்தார். இறுதியில் சிம்பாப்வே அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 141 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து 144 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இலங்கை தரப்பில் மலிங்க 3, விக்கெட்டுகளையும் பெர்னாண்டோ, முரளிதரன் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். (ர)

# கங்குலி ஓய்வு பெறலாம்

## அக்ரம் ஆலோசனை

கொல்கத்தா, ஒக்.12

அவமானத்தைச் சகிப்பதைவிட சௌர்வ் கங்குலி கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற்றுவிடலாமென்று வசீம் அக்ரம் கூறியுள்ளார். பாகிஸ்தான் முன்னாள் கிரிக்கெட் வீரரான வசீம் அக்ரம், கங்குலியின் சொந்த ஊரான கொல்கத்தாவில் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

அப்போது அவர் நிருபர்களிடம் கூறியதாவது:-

''கிரிக்கெட் உலகில் இந்திய துணைக் கண்டத்தின் ஹீரோவாகத் திகழ்ந்தவர் கங்குலி. ஹீரோக்களைத் தூக்கி எறிவதுதான் நமது துணைக் கண்டத்தின் கலாச்சாரம். இதனால்தான் கங்குலியையும் அவமானப்படுத்துகிறார்கள். இது எனக்கு மிகவும் வேதனையாக இருக்கின்றது. எனக்கு இதுபோன்ற அவமானம் ஏற்பட்டு இருந்தால் கிரிக்கெட்டையே தூக்கி எறிந்துவிட்டு ஓய்வுபெறுகிறேன் என அறிவித்து இருப்பேன். அதை கங்குலியும் செய்யலாம். ஆனாலும் இது கங்குலியின் சொந்த விடயம். அவர்தான் முடிவு எடுக்கவேண்டும்''- இவ்வாறு கூறினார். (ர)

# தொடக்க வீரராக பிளின்ரொப்?

இந்தியாவில் நடைபெறும் மினி உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில், இங்கிலாந்து அணித் தலைவர் அன்ட்ரூ பிளின்ரொப் தொடக்க வீரராகக் களமிறக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது குறித்து இங்கிலாந்துத் தேர்வுக் குழு தலைவர் கிரவெனி கூறியதாவது:-

''முதல் 10 ஓவர்களில் அதிரடியாக ஓட்டங்கள் குவிப்பது மிகவும் முக்கியமானது. திரெஸ்கோதிக், வோகன் ஆகியோர் இல்லாத நிலையில் ஸ்ரோரஸ் உடன் தொடக்க வீரராக யாரைக் களமிறக்குவது என்பது பற்றி ஆலோசித்து வருகின்றோம்.

''அணித் தலைவர் பிளின்ரொப், கெவின் பீற்றர்ஸன் ஆகிய இருவரில் ஒருவர் தொடக்க வீரராகக் களமிறங்கும் வாய்ப்பு உள்ளது. யார் ஆட்டத்தைத் தொடங்கினாலும், முதல் 10 ஓவர்களில் அதிகஓட்டங்கள் குவிக்கவேண்டுமென்பதே எங்கள் நோக்கம். பிளின்ரொப் எந்த இடத்திலும் களமிறங்கி ஓட்டங்களைக் குவிக்கக் கூடியவர். அவருக்குஅதிக வாய்ப்புள்ளது''- இவ்வாறு கூறினார். (ர)

# தரங்கவின் ஆட்டம் சிறப்பாக உள்ளது

## மஹேல பாராட்டு

அஹமதாபாத், ஒக்.12

கடந்த ஆண்டு இறுதியிலிருந்து உபுல் தரங்காவின் ஆட்டம் சிறப்பாகவுள்ளது என்று இலங்கைக் கிரிக்கெட் அணியின் தலைவர் மஹேல ஜெயர்த்தன தெரிவித்துள்ளார்.

சிம்பாப்வே உடனான வெற்றியின் பின்னர் நிருபர்களிற்கு அளித்த பேட்டியிலேயே மஹேல மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறுகையில்:-

''கடந்த ஆண்டிலிருந்து உபுலின் ஆட்டம் சிறப்பாகவுள்ளது. நியூஸிலாந்து, அவுஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளில் வித்தியாசமான சூழ்நிலைகளில் சிறப்பாகச் செயற்பட்டுள்ளார். அவரது ஆட்டத்தில் நாளுக்கு நாள் முன்னேற்றம் காணப்படுகின்றது'' என்று கூறினார். (ர)

# இந்தியாவில் அதிக ஆட்டங்களில் பங்குபற்ற விரும்புகிறார் பிரெட் லீ

புதுடில்லி, ஒக்.12

இந்தியாவில் அதிககிரிக்கெட் ஆட்டங்களில் தான் ஆட விரும்புகின்றார் என அவுஸ்திரேலிய அணியின் வேகப் பந்துவீச்சாளர் பிரெட் லீ கூறியுள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில்:-

''இந்திய நாட்டையும் எனது வீட்டைப் போல்தான் நினைக்கின்றேன். ஹிந்தி நடிகர்களை எனக்கு அதிகம் பிடிக்கும். டில்லி மற்றும் மும்பையில் வாழும் மக்களையும் எனக்கு அதிகமாகப் பிடிக்கும். எனவே, இங்கு வர மகிழ்ச்சியாகவும் ஆர்வமாகவும் இருக்கும். இந்த முறை உடல் தகுதியுடன்உள்ளேன். எனவே, எனது முழுப் பங்களிப்பையும் அணிக்குத் தரமுடியும் என்ற நம்பிக்கை உள்ளது.

'' இந்தியாவில் உள்ள ஆடுகளங்கள் பொதுவாகத் துடுப்பாட்டத்துக்குச் சாதகமாக இருந்தாலும், குறிப்பிட்ட விக்கெட்டுகளைக் குறி வைத்து வீழ்த்தி விட்டால் ஆட்டத்தின் தன்மையே மாறி விடும். ஆடுகளத்தின் தன்மைக்கு ஏற்றாற்போல் வீரர்கள் திறமையை வெளிப்படுத்த பழகிக் கொள்ள வேண்டும்'' என்று கூறினார். (ர)


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

## உத்தியோகபூர்வ முடிவுகள்

821 நீலம்

வெற்றி இலக்கங்கள்

கும்பம் 15 32 52 55

10-10-2006

செல்லுபடியாகும் தொடர் இல. 4582848 - 4598221

ஜக்பொட் பரிசு ரூபா.1,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 339,014 | 10/- | 3,390,140/- |
| 2 இலக்கங்கள் | 31,173 | 20/- | 623,460/- |
| 1 இல. + லக்கினம் | 30,913 | 30/- | 927,390/- |
| 2 இல. + லக்கினம் | 2,848 | 100/- | 284,800/- |
| 3 இலக்கங்கள் | 823 | 500/- | 411,500/- |
| 3 இல. + லக்கினம் | 79 | 5,000/- | 395,000/- |
| 4 இலக்கங்கள் | 5 | 100,000/- | 500,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,000,000/- | - |
| மொத்தம் | | | 6,532,290/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 404,860 | | 7,555,790/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,757,450/-

தொடர் இல. 3471476 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2006 ஒக்டோபர் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

35, சேர் சைமன்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கொழும்பு | 4586487-4-09 |
| ஹம்பாந்தோட்டை | 4586159-2-21 |
| கம்பஹா | 4592813-2-31 |
| களுத்துறை | 4594074-6-13 |
| கொழும்பு | 4594823-0-33 |



யாழ். மாவட்ட

பேக்கரி உரிமையாளர் சங்கம்

முக்கிய அறிவித்தல்

பாண் விலையில் எவ்வித மாற்றமும் இல்லை

450 கிராம் நிறை கொண்ட ஒரு றாத்தல் பாணின் ஆகக் கூடிய சில்லறை விற்பனை விலை 28ரூபாஆகும். இதனை மீறி கூடுதலாக விற்பனை செய்யும் வியாபார நிலையங்களுக்கு பாண் விநியோகம் நிறுத்தப்படும்.

(சி-51131) நிர்வாகம்.


# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில் 26 - 10 - 1975

ஆண்டவன் மடியில் 29 - 08 - 2006

அமரர்

ஜேசுதாசன் டேமியன்

எங்கள் உயிரே!
அன்று காற்றோடு கேட்ட செய்தி கனவென்றாவது இருந்திருக்கக்கூடாதா?
உனது உறவுகள் நாம் கலங்கி, கூமுரி அழுகின்றோம்
தேறுதல் அடைய '' உன்னைப் பார்க்க வேண்டும் திரும்பி வந்திட மாட்டீரோ''
உனது நிமிர்ந்த பார்வையும், நடையும், அழகிய கட்டுடலும், துணிந்த உள்ளமும், கலை மிடுக்கும் கொண்ட தமிழனுக்கே உரித்தான வீர புருஷன் நீ.
உம் இழப்பு எம்மை பிழிகின்றது நீ நினைப்பது எமக்குப் புரிகின்றது
அடைக்கல மாதா என்னைக் கைவிட மாட்டா என்று நம்பி நம்பியே வாழ்ந்திட்ட உமது நம்பிக்கை, விசுவாசம் அன்னையவள் புனிதர்கள் வதிவிடம் சேர்த்துவிடுவாள்

''உயிர்த்தெழச் செய்பவனும் வாழ்வு தருபவனும் நானே
என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்''
(ஜோவான் 11:25)

உன் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா,
சகோதரர்கள், சகோதரிகள்,
மனைவி

186, இரண்டாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். (57193)

# முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



நவிண்டில் சந்தை வீதி, ... யாழ்ப்பாணம்.

நோர்வேயில் வசிக்கும்
திரு.திருமதி கமலதாசன் இன்பசோதி தம்பதியரின் செல்வப் புதல்வன்

**கஜானன்**

தனது முதலாவது பிறந்த நாளை இன்று (12.10.2006) வியாழக்கிழமை நோர்வேயில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடுகின்றார்.

அவரை அப்பா, அம்மா இலங்கையிலுள்ள அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, அக்காமார், சித்தப்பாமார், அத்தைமார், மச்சாள்மார் மற்றும் வெளிநாட்டில் வசிக்கும் அத்தை மாமா (சுவிஸ்), அத்தை மாமா சித்தப்பா (பிரான்ஸ்), பெரியப்பா, பெரியம்மா, அக்காமார், அண்ணாமார் (ஜேர்மனி), பெரியப்பா, பெரியம்மா, அக்காமார், அண்ணாமார் (டென்மார்க்), பெரியப்பா, பெரியம்மா, அக்காமார் (டென்மார்க்) மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் கஜானனை நவிண்டில் சிவகாமி அம்மன் அருள்பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

வாழ்த்தி நிற்கும்:
க.இராமலிங்கம் (அப்பப்பா)

(54320)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# பேச்சுக்கான நிகழ்ச்சி நிரல் யதார்த்த பூர்வமாக அமையட்டும்

''இலங்கை அரசுடன் நிர்ணயிக்கப்பட்ட திகதிகளில் அமைதிப் பேச்சு நடக்குமா அல்லது இல்லையா என்பது புலிகளின் கைகளில் இல்லை. இலங்கை அரசினதும், சர்வதேச சமூகத்தினதும் கைகளில் தான் உள்ளது. பேச்சுக்கான சூழலைக் குழப்பும் வகையில் அரசு செயற்படுமானால் பேச்சுத் தொடர்பான எமது நிலைப்பாட்டிலும் மாற்றம் வரும்.'' - என்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், நோர்வேத் தூதுவர் ஊடாக சர்வதேச சமூகத்துக்கு நேற்று முன்தினம் தெரியப்படுத்தியிருந்தார்.

பாரிய படைநடவடிக்கைகளை அரசுத் தரப்பு எடுக்குமானால், பேச்சுக்கான இணக்கப்பாடு தொடர்பான தங்களின் முடிவைத் தாங்கள் மீள்பரிசீலனை செய்ய வேண்டிய நிலை ஏற்படும் என்பதையும் அப்போது தெட்டத் தெளிவாக நோர்வேத் தூதுவருக்குத் தாம் விளக்கினார் என்றும் தமிழ்ச்செல்வன் குறிப்பிட்டிருந்தார்.

அவர் இத்தகவலை வெளியிட்டு பதினெட்டு மணித்தியாலங்கள் பூர்த்தியாவதற்குள் முகமாலை, கிளாலிப் பகுதிகளில் பெரும் படை நகர்வு முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

உத்தேச இணக்கப்பாட்டின்படி அமைதிப் பேச்சு நடப்பதற்கு இன்னும் இரண்டு வாரங்களே உள்ளன. இந்த நிலையில் அந்தப் பேச்சுக்கள் திட்டமிட்டபடி நடைபெறுமா என்பது இன்னும் உறுதியாகாமல் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது.

யுத்தமுனையில் தொடர்ந்து இடம்பெறும் சம்பவங்கள் அத்தகைய சந்தேக நிலையை ஏற்படுத்தி வருகின்றன.

இந்தத் தடைகள், இடையூறுகள், முட்டுக்கட்டைகள் போன்றவற்றைத் தாண்டி, உடன்பட்டதன் பிரகாரம் எதிர்வரும் 28, 29 ஆம் திகதிகளில் சுவிட்ஸர்லாந்தில் அரசு மற்றும் புலிகளின் பிரதிநிதிகள் ஒரு மேசையின் எதிரெதிரே அமர்ந்தாலும் கூட, அங்கு அவர்கள் என்ன பேசுவார்கள் என்பது இன்னும் உறுதியாகவில்லை.

பேச்சுக்கான நிகழ்ச்சி நிரல் ஏதும் இன்னும் இறுதி செய்யப்படவில்லை. ஆனாலும், இலங்கை அரசுத் தரப்பில் 'வழமை போல' அதன் பாதுகாப்புப் பேச்சாளரும், அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல முந்திரிப் பருப்பு மாதிரி முந்திக் கொண்டு நிகழ்ச்சி நிரல் பற்றிய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டிருக்கின்றார்.

அவரது அறிவிப்பின்படி -

ஜனநாயகம், பலகட்சி அரசியல் முறைமை, பன்மைத்துவம், மனித உரிமைகள், சிறுவர்களைப் படைக்குத் திரட்டுதல், வடக்கு - கிழக்கு அபிவிருத்தி, அதிகாரப் பகிர்வு என்று ஏழு விடயங்கள் அரசுத் தரப்பினால் நிகழ்ச்சி நிரலாக முன்மொழியப்பட்டிருக்கின்றது.

ஆனால், இதுதான் அரசின் உறுதியான நிகழ்ச்சி நிரல் பட்டியலா என்பது தெரியவில்லை.

ஏனெனில், அமைதி முயற்சிகள் விடயத்தில் அரசின் பாதுகாப்புத் துறைப் பேச்சாளரின் அறிவிப்புகள் அப்படிப்பட்ட மயக்கத்தைத் தருவனவாகவே கடந்த காலத்தில் இருந்து வந்திருக்கின்றன என்பதே நமது அனுபவம்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு அரசு மூன்று முன் நிபந்தனைகளை விதித்திருக்கின்றது என இதே பாதுகாப்புப் பேச்சாளர் பரபரப்பாக அண்மையில் வெளியிட்ட அறிவிப்பு தடல்புடலாக ஊடகங்களில் அஞ்சலாகின. ஆனால், அத்தகைய முன்நிபந்தனை என்ற பேச்சே இல்லாமல், நிபந்தனையற்ற பேச்சுக்கு அரசு, புலிகள் ஆகிய இரண்டு தரப்பும் இணங்கியதும், தமது முன்னைய அறிவிப்புக் குறித்துக் குத்துக்கரணம் அடித்தார் அமைச்சர் கெஹெலிய.

''அவை (தாம் முன்னர் குறிப்பிட்ட மூன்று விடயங்களும்) பேச்சுக்கான முன்நிபந்தனைகள் அல்ல. பேச்சை ஆரம்பிப்பது தொடர்பான எமது சிரத்தைக்குரிய விடயங்கள் என்றே குறிப்பிட்டேன்'' - எனப் பின்னர் புது வியாக்கியானம் - விளக்கம் - அளித்தார் அவர்.

பேச்சுக்கான நிபந்தனைகள் என்று அவர் குறிப்பிட்டவை போல, இப்போது பேச்சுக்கான நிகழ்ச்சி நிரல் என்று அவர் குறிப்பிடும் விடயங்களும் பின்னர் அரசுத் தரப்பாலேயே உருமாற்றப்படுமா என்பது தெரியவில்லை.

ஆனால், அரசுத் தரப்பில் இப்போது பிரேரிக்கப்படும் இந்த ஏழு அம்சங்களை பேச்சுக்கான நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்வதற்கு - அதுவும் இந்தக் கட்டத்தில் சேர்த்துக் கொள்வதற்கு - புலிகள் தரப்பு இணங்குமா என்பது பெரும்பாலும் சந்தேகத்திற்குரியதே.

இரு தசாப்தங்களுக்கு மேலாக இடைவிடாது தொடர்ந்த கொடிய யுத்தத்தின் விளைவாகத் தமிழர் தாயகத்தில் தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கை படிப்படியாக மோசமடைந்து ஒரு பாரிய மனிதாபிமானப் பிரச்சினையாக விஸ்வரூபம் எடுத்திருக்கின்றது. நிழல் யுத்தம் தீவிரமடைந்து அப்பாவிகளின் உயிர்களையும், உடைமைகளையும் காவு கொள்ளும் மிக மோசமான நெருக்கடி நிலைமை நிலவுகின்றது. ஒரு போரியல் சூழலுக்குள் தள்ளப்பட்டு, அந்த இக்கட்டில் சிக்கித் தவிக்கும் மக்களின் அன்றாட, அவசர வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டியதே தமிழர் தரப்பைப் பொறுத்தவரை இன்று மிகமுக்கியமான - ஒதுக்கித் தள்ளி விடவோ, தவிர்க்கவோ முடியாத - விவகாரமாகும்.

ஆகவே, முதலில் வடக்கு - கிழக்கில் வழமை நிலையை ஏற்படுத்தி, போரின் பிடியில் அந்தரிக்கும் - பரிதவிக்கும் - மக்களை மீட்டெடுப்பதற்கு அவசரமாகவும், விரைந்தும் மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் குறித்துத் தீர்மானித்து, அவசர அவசரமாக அவற்றைச் செயற்படுத்துவது பற்றி ஆராய வேண்டும். அதை விடுத்து, அமைச்சர் கெஹெலிய குறிப்பிடுவது போல இனப்பிரச்சினைக்கான அடிப்படை விடயங்கள் குறித்தோ, வேறு விவகாரங்கள் பற்றியோ பேச முயல்வது அர்த்தமற்றது; இன்றைய நிலையில் அபத்தமானது.

உடனடி உயிர் வாழ்க்கைப் பிரச்சினையைத் தீர்த்துக் கொண்டு தான் - அச்சிக்கலுக்கு முடிவு கண்டு கொண்டு தான் - அடிப்படை விடயங்கள் குறித்துப் பேச முயல வேண்டும்.

ஆகவே, இந்த யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப, அமைதிப் பேச்சுக்கான நிகழ்ச்சி நிரலை அமைப்பதே பொருத்தமானது; நிகழ்வுச் சாத்தியமானது; பயன் தருவது.

## அல்லைப்பிட்டி படுகொலைகள் தொடர்பாக மனித உரிமை அலுவலகத்தில் நேற்றுப் பதிவு

யாழ்ப்பாணம், ஒக்.12

அல்லைப்பிட்டி உட்பட தீவுப்பகுதியில் படுகொலை செய்யப்பட்டவர்கள் தொடர்பான விவரங்கள் நேற்றைய தினம் தமது அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டன என்று மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ். அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றைய தினம் ஐந்தாவது நாளாக படுகொலை தொடர்பான பதிவுகள் இடம் பெற்றன என்றும்-

தீவுப்பகுதியில் படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் வருகைதந்து தமது அவலம் மிக்க படுகொலைகள் பற்றிய பதிவுகளை மேற்கொண்டனர் என்றும்- அந்த வட்டாரங்கள் மேலும் கூறின.

பொதுவாக அல்லைப்பிட்டியில் இடம் பெற்ற படுகொலைகள் சம்பந்தமாக பதிவுகளை மேற்கொண்டவர்களின் தகவல்கள் அவர்கள் பட்ட துன்பங்களின் கொடூரத்தை வெளிப்படுத்துபவையாக அமைந்திருந்தன.

நேற்றைய தினம் சுமார் 38 இற்கும் மேற்பட்டவர்கள் பதிவுகளை மேற்கொண்டனர். இதே நேரம் ஒருசிலர் நேற்று பதிவுகளை மேற்கொள்ள சமுகமளிக்கவில்லை.

ஏற்கனவே அறிவிக்கப்பட்டதற்கிணங்க பிரதேச வாரியான பதிவுகள் நேற்றுடன் முடிவடைந்தன.

இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் உரிய அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (68)

## தேசிய கல்விநிறுவக விரிவுரையாளர், மாணவர் கவனத்திற்கு...!

யாழ்ப்பாணம் , ஒக்.12

தேசிய கல்வி நிறுவக கல்வி மாணி பாடநெறியில் 2 ஆம் வருட ஆசிரிய மாணவர்கள், முதலாம் வருட கல்வி டிப்ளோமா ஆசிரிய மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நிலையத்திற்கு சமுகமளிக்குமாறு பிராந்திய இணைப்பாளர் த.வில்வநாதன் கேட்டுள்ளார். (202)

## போதனா வைத்தியசாலையில் மருந்துகள் கைவசம் உண்டு

### ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.12

யாழ். போதனா வைத்தியசாலைக்கு தேவையான மருந்து வகைகள் தொடர்ந்தும் எடுத்துவரப்படுகின்றன. இதனால் இதுவரை வைத்தியசாலையில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படவில்லை.

இவ்வாறு யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் எஸ். ஞானசோதி உதயனுக்கு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும்தெரிவித்ததாவது:-

அண்மைக்காலத்தில் குடாநாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையின் போது யாழ். போதனா வைத்தியசாலையில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படவில்லை. தற்போது மருந்துகள் கப்பல் மூலம் ஓரளவு எடுத்துவரப்படுகின்றன.

கடந்த ஓகஸ்ட் 11 ஆம் திகதிக்குப் பின்னர் ஊரடங்கு நடைமுறையிலிருந்த காரணத்தால் நோயாளர்கள் வைத்தியசாலைக்கு வருவது மிகக் குறைவாக இருந்தது. தற்போது நோயாளர்களின் வரவு வழமைக்குத் திரும்பிவிட்டது.

உத்தியோகத்தர் வரவில் தொய்வு ஏற்படும் போது மாற்று நடைமுறைகள் கையாளப்படுகின்றன. 'சிவ்ற்' முறையில் வேலை பகிர்ந்தளிக்கப்படுவதால் நோயாளர் பாதிக்கப்படுவதில்லை. ஊழியர்களுக்கு அதற்காக நன்றி தெரிவிக்க வேண்டும்.

நோயாளருக்கு உணவு வழங்குவதில் தான் பிரச்சினை உள்ளது. அதற்குத் தீர்வு காண்பதற்காக பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினரோடு தொடர்பு கொண்டுள்ளோம். குறிப்பாக, புற்றுநோயாளருக்கு சிகிச்சையளிப்பதற்கான பொருத்தமான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்றார். (202-88)

## மருத்துவ மாது மாணவிகளுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.12

மருத்துவ மாது மாணவிகள் 2004 'அ' பிரிவினருக்கு இரண்டுமாத புனர் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

எனவே பின்வரும் மருத்துவ மாது மாணவிகளை, 2004 'சி' பிரிவு மருத்துவ மாணவிகளுடன் இணைந்து பயிற்சி பெறும் வகையில் எதிர்வரும் முதலாம் திகதி தாதியர் பயிற்சிக் கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

அழைக்கப்பட்டுள்ள மருத்துவ மாது மாணவிகளின் விவரம் வருமாறு:-

ஜே.சுலேகா, ரி.சிலக்சனா, எஸ்.சுஜாதா, ஆ.யோகராணி, ஜே.தேனுகா, எஸ்.சிவதர்சினி, ஆர்.தட்சாயினி, ஆர். தர்சினி, எக்ஸ்.எவ்.கின்சிறேணுஜா, எஸ்.மலர்விழி, எஸ்.லாவண்யா, ஆர்.பிரவீனா, கே.சங்கீதா, எஸ். ஜதீஸ்வரி, எஸ். சித்திரா, எம்.டயானாகுயின்றோஸ், ஆர். இந்துசா, ஜி.இந்திராணி, கே.ஜெயபோதினி, ஜே.ஜெயலட்சுமி, கே.ஜிலாணி, பி.றோயலா யூலியற்.

## யாழ்.நகரில் ஸ்ரான்லி வீதியில் அடிக்கடி தடைப்படும் போக்குவரத்து

யாழ்ப்பாணம்,ஒக்.12

யாழ்.ஸ்ரான்லி வீதி நேற்றுமுன் தினம் பொது வாகனப் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டிருந்தது.

யாழ். கஸ்தூரியார் சந்தியிலிருந்து ஆரியகுளம் வரையிலான பகுதியே தடைகள் போடப்பட்டு மறிக்கப்பட்டிருந்ததுடன், பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது.

பாதசாரிகள் மற்றும் சைக்கிளில் பயணித்தோர் மட்டுமே மேற்படி வீதியூடாகப் பயணிக்க அனுமதிக்கப்பட்டிருந்தனர். வீதி மூடப் பட்டிருந்தமைக்கான காரணம் தெரியவரவில்லை.

இதேவேளை, நேற்றும் ஸ்ரான்லி வீதியூடான போக்குவரத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தன. வாகனங்கள் ஸ்ரான்லி வீதியூடாக வந்து சிறாம்பியடி வீதியூடாகத் திருப்பப்படுவதை அவதானிக்கக் கூடியதாக இருந் தது. ஸ்ரான்லி வீதியூடாக பெருமாள் கோயில் வீதியும் நேற்று தடை செய்யப்பட்டிருந்தது. (202-88)

## க.பொ.த. பரீட்சை முடிவுகள் நேற்று வந்து சேர்ந்தன

### குடாநாட்டில் 72 பேருக்கு '3 ஏ' பெறுபேறு

நல்லூர், ஒக்.12

க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கான முடிவுகள் நேற்று புதன்கிழமை யாழ். வலயக் கல்விப்பணிமனைக்கு வந்து சேர்ந்தன. பரீட்சை முடிவுகள் உடனடியாகவே சம்பந்தபட்ட பாடசாலைகளுக்கு கிடைக்க ஏற்பாடுகள் செய்துள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

தீவுப்பகுதிக்கான பரீட்சை முடிவுகள் தீவக வலயக் கல்விப் பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் கலைப்பிரிவில் 35 மாணவிர்களும் வர்த்தகத்துறையில் 14 மாணவர்களும் கணித்தில் 16 மாணவர்களும் உயிரியலில் 7 மாணவர்களுமாக 72 மாணவர்கள் 3ஏ சித்திகளைப் பெற்றுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. செல்வரத்தினம் மேலும் தெரிவித்தார். (ப-111)

## பதவி உயர்வு பெறும் ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு, நிலுவைகளை வழங்க ஏற்பாடு

அச்சுவேலி, ஒக்.12

திருத்தி அமைக்கப்பட்ட ஆசிரியர் சேவை பிரமான குறிப்பின் பிரகாரம் பதவி உயர்வு பெறும் ஆசிரியர்களுக்கான சம்பள உயர்வையும் சம்பள நிலுவையையும் உரிய முறையில் வழங்குவதற்கு வடக்கு- கிழக்கு மாகாண கல்வித்திணைக்களம் எற்பாடு செய்துள்ளது. வலயக் கல்விஅலுவலகங்கள் உரிய நிதிக்கொடுப்பனவு தொடர்பான கோரிக்கைகளை சமர்ப்பித்து நிதிஒதுக்கீட்டை பெற்றுக்கொள்ளலாம் எனஅறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் 4/2005 சுற்றறிக்கையின் பிரகாரம் பதவி உயர்வு பெறும் ஆசிரியர்களுக்கு 2005 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் சம்பள பாக்கி வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள போதிலும் அவர்களுக்கான சம்பள உயர்வையோ சம்பள நிலுவையையோ வழங்குவது காலதா[illegible]ம் ஏற்படுவதாக ஆசிரியர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்கள மேலதிக கல்விப்பணிப்பாளர் எஸ். தண்டாயுதபாணி கருத்துத் தெரிவிக்கையில்-

ஆசிரியர்களின் பதவி உயர்வு தொடர்பான சம்பள உயர்வையும் சம்பள நிலுவையையும் உரிய முறையில் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும்-

வலயக் கல்வி அலுவலகங்களில் இருந்து அது தொடர்பான கோரிக்கை [illegible]ர்ப்பித்து நிதி ஒதுக்கீடுகளை [illegible]ற்று வழங்கலாம் எனக்கூறினார். (ப-111)

## மண்எண்ணெய் வழங்கல் இன்றுடன் பூர்த்தி

யாழ்ப்பாணம், ஒக்.12

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 5 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கு மண்எண்ணெய் வழங்குவதற்கான இறுதி நாள் இன்று என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜே/114, ஜே/121, ஜே/122, ஜே/124, ஜே/126 ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த கும்பங்களுக்கு பங்கீட்டு அடிப்படையில் தலா 2லீற்றர் வீதம் திருநெல்வேலி குகன் எரிபொருள் நிலையத்தில் மண்எண்ணெய் வழங்கப்பட்டு வருகின்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்ட இந்த விநியோகம் இன்று [illegible] முடிவடைகின்றது என நிலைய [illegible] தெரிவித்தார். (202)

## தபால் அதிபர் பதவி: போட்டிப் பரீட்சை இம்மாதம் 28 ஆம் திகதி

கொழும்பு , ஒக்.12

தபால் அதிபர் பதவிகளுக்கு நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பித்திருந்தவர்களுக்கான போட்டிப்பரீட்சை எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெற உள்ளதாக தபால் திணைக்கள வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்தன.

யாழ்ப்பாணத்தில் அசாதாரண சூழ்நிலை நிலவுவதால் இப் பரீட்சை நடைபெறுமா என்பது குறித்து நிச்சயமற்ற நிலை நிலவியது. எனினும் பரீட்சையை அங்கு இம்மாதம் 28 ஆம் திகதி நடத்துவதற்கு முடிவாகி உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. ஜி.சீ.ஈ. உயர்தரப் பெறுபேறுகளின் அடிப்படையில் இப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு ஏற்கப்பட்டிருந்தன.

இதே வேளை-

இப்பரீட்சைக்குத் தோற்றுவோரில் திறமை அடிப்படையில் 736 பேர் தெரிவு செய்யப்பட்டு நியமனங்கள் வழங்கப்படும் என தபால் திணைக்கள வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முகமாலை மற்றும் கிளாலி, நாகர்கோவில் பகுதிகளில் நேற்று நடைபெற்ற சமரில் மரணமான இராணுவத்தினரில் ஒரு தொகுதியினரின் உடல்கள் கிளிநொச்சி பொது மைதானத்தில் வைக்கப்பட்டிருந்தன. பொது மக்கள் அதனைப்பார்ப்பதனைப் படத்தில் காணலாம்.

## கப்பல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவுசெய்யப்பட்ட சுமார் ஆயிரம்பேர் சோதனைகளையடுத்து பஸ்களில் ஏற்றப்பட்டு காங்கேசன்துறைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதேவேளை - திருகோணமலையிலிருந்து 593பேரை ஏற்றிய கப்பல் ஒன்று நேற்று காங்கேசன்துறையை வந்தடைந்தது. (68)

## கடற்படையினருக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு ஆய்வு நிறுவனத்தினூடாக ராடர் கருவிகள், கடற்படைக்கான சுடுகலன்கள், இலத்திரனியல் உபகரணங்கள் போன்றவற்றை இலங்கைக்கு ஏற்றுமதிசெய்ய அனுமதி கிடைத்துள்ளதாக அவர் தெரிவித்தார். ''இலங்கை அரசின் இறைமையைப் பாதுகாக்கும் பொருட்டு இந்த ஆயுதங்களை இந்தியா வழங்குகிறது.''- என்று அவர் சொன்னார். (த)

## பேச்சுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுக்கு அதிகாரம் இருக்கிறது என்பது பேச்சுக்குரிய ஒரு நிபந்தனையாக இருப்பதாக அரசு தெரிவித்துள்ளது.

வடக்கின் பல இடங்களில் இராணுவத்தினர் தாக்குதல் நடத்துவதாகக் கூறி, சர்வதேச சமூகத்தை விடுதலைப் புலிகள் திசை திருப்புகின்றனர் என்று ஊடக மத்திய நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

அரசு பேச்சு நடத்தத் தயாராக இருக்கும் காலகட்டத்தில் இவ்வாறான செயற்பாடுகளில் விடுதலைப் புலிகள் ஈடுபடுவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கில் இராணுவத்தினர் தாக்குதல் நடத்தவில்லை என்றும் அவ்வாறு தாக்குதல் நடத்துவதற்கு அரசுக்கு எதுவிதமான நோக்கமும் இல்லை என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-12)

## சமாதானத்தைச் சீர்குலைக்கின்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒட்டுமொத்த இழப்பு கள் பற்றி இப்போதைக்கு எதுவும் கூறமுடியவில்லை. 75 வரையான படைச்சிப்பாய்களின் சடலங்கள் எங்களது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருக்கின்றன. செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஊடாக அவற்றைக் கையளிப்பதற்கு ஏற்பாடு செய்துவருகிறோம்.

★ **கேள்வி:-** எழுபத்தைந்து சடலங்கள் உங்களது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இருக்கின்றன என்றால் இராணுவத்தினர் உங்கள் முன்னணிக் காவலரண்களை மீறி அந்தப் பகுதிக்கு வந்திருக்கிறார்கள் என்று அர்த்தமாகுமா?

● **இளந்திரையன்:-** ஆமாம். ஓரளவு ஊடுருவினார்கள் என்றுதான் கூறமுடியும்.

★ **கேள்வி:-** எங்களது முன்னரங்குகளுக்குப் பின்னால் விடுதலைப் புலிகள்தான் பெரும் தொகையில் அணிதிரண்டு கொண்டிருந்தார்கள். அதனால்தான் நாங்கள் தாக்கினோம் என்று இராணுவத்தரப்பு கூறுகின்றதே?

● **இளந்திரையன்:-** நாங்கள் எங்களது நிலைகளை வழமைபோலவே பலமாக வைத்திருக்கிறோம். இந்தச் சூழ்நிலையைக் குழப்புவதற்கு அவர்களுக்கு ஏதாவது சாக்கு தேவைப்படுகிறது. தவிர, அவர்களது பக்கத்தில் நியாயம் இருந்திருக்குமாயின் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரை அவர்கள் ஏன் அப்பகுதிக்குள் அனுமதித்திருக்கக்கூடாது? இது அவர்களது போலித்தனமான வாதம்.

★ **கேள்வி:-** இப்போது அந்த முன்னரங்க காவல்நிலைகளில் என்ன நிலைமை?

● **இளந்திரையன்:-** எங்கள் முன்னரங்க நிலைகளை நாங்கள் வலுப்படுத்தி இருக்கிறோம். தவிர அந்தப் பகுதிகளில் படையினரின் சடலங்களைத் தேடுவதிலும், சந்தேகத்துக்கிடமான இடங்களை அழிப்பதிலும் ஈடுபட்டிருக்கிறோம்.

★ **கேள்வி:-** முன்னர் இருந்தது போன்று இரு தரப்பும் தத்தமது நிலைகளில் இருக்கின்றன என்று அர்த்தமாகுமா?

● **இளந்திரையன்:-** எங்களது நிலைகளை ஊடுருவிய படையினரை நாங்கள் விரட்டி அடித்துவிட்டோம். அவர்கள் தங்கள் பழைய நிலைக்குத் திரும்பிவிட்டார்கள்.

★ **கேள்வி:-** விடுதலைப் புலிகள் தரப்பில் பெருத்த சேதம் ஏற்பட்டிருக்கின்றது என்று இராணுவத்தரப்பில் கூறப்படுகின்றதே...? இதுவரை உங்கள் தரப்பிலே என்ன இழப்பு?

● **இளந்திரையன்:-** எமது தரப்பில் தமிழீழத் தேசியத் துணைப்படையைச் சேர்ந்த நான்கு வீரர்களும் ஆறு போராளிகளுமாக மொத்தம் பத்துப்பேர் தமிழ் மண்ணுக்காகத் தங்கள் உயிர்களைத் தந்திருக்கிறார்கள்.

★ **கேள்வி:-** இவ்வளவு பெரிய மோதலிலே உங்களது இழப்புகளை நீங்கள் குறைத்துக் கூறுவதாக எதிர்த்தரப்புக் கூறலாம் அல்லவா?

● **இளந்திரையன்:-** ஒரு சமரின் சூழ்நிலைகள் பெரும்பாலும் இராணுவ ரீதியாகப் பார்ப்பவர்களுக்குப் புரியக்கூடியது. நகர்ந்துகொண்டிருக்கின்ற படையினர் நிலைகளிலே இருந்து தாக்குகின்ற ஒருபடையினரை எதிர்கொள்ளும்போது இவ்வாறான இழப்புகள் ஏற்படுவது வழக்கம். முன்னர் மண்டைதீவிலும் இது போன்ற ஒரு தாக்குதலை நடத்தி இருந்தோம் அதில் இராணுவத்தரப்பில் 113 பேர் உயிரிழந்தனர். எங்கள் தரப்பில் 11 போராளிகளே வீரச்சாவடைந்திருந்தனர். இது தரைத்தோற்றம், பயன்படுத்தப்படுகின்ற ஆயுதங்கள், எதிரி விடுகின்ற தவறுகள், எங்களது உத்திகள் போன்றவற்றால் இத்தகைய தொகைகள் வருவது வழக்கம்.

★ **கேள்வி:-** நோர்வேத் தூதர் உங்களுடன் சந்திப்பு நடத்தி ஒருநாள் கழிவதற்கு முன்பாகவே பெரிய சண்டை நடந்துள்ளது. இது உத்தேசப் பேச்சுக்கு ஒரு பாதகத்தை ஏற்படுத்தும் என நினைக்கிறீர்களா?

● **இளந்திரையன்:-** அதுதான் எங்களுடைய கரிசனையாக இருக்கிறது. உண்மையிலேயே எங்களது நல்லெண்ணத்தை நோர்வேத் தூதுவரூடாக வெளிப்படுத்திய பின்பு, பேச்சுக்கு இணக்கமான - சாதகமான பதில்களை அறிவித்தபின்பு - இணைத்தலைமை நாடுகளின் கோரிக்கையை உதாசீனம் செய்யும்வகையில் - சமாதானத்துக்கான ஒரு சூழ்நிலையை ஒட்டுமொத்தமாகச் சீர்குலைக்கின்ற வகையிலும் - இராணுவம் அடாவடித்தனமாக இந்த நடவடிக்கையைச் செய்துள்ளது. இது உண்மையிலேயே கவலை அளிப்பதாக உள்ளது.

இலங்கை அரசுக்கு சமாதானம் மீது உண்மையிலேயே நம்பிக்கை இருக்கிறதா, விருப்பு இருக்கிறதா அல்லது சர்வதேச சமூகத்துக்குப் போலி வேஷமிட்டுக் காட்டுகிறதா என்பதை சர்வதேச சமூகம் புரிந்துகொள்ள வேண்டிய தருணம் இது. (ஐ-12)

A/L DAY CLASS
கலைப் பிரிவு
வர்த்தகப் பிரிவு
ஆரம்பம்:
12.10.2006
வியாழன் - 7 a.m
விபரங்கள் அலுவலகத்தில்
யூனிவேர்சல்

BEACON - யாழ். நகர்
A/L DAY CLASS
வர்த்தகப் பிரிவு
ஆரம்பம்:
16.10.2006 - Mon 8 a m
2007 Paper Sat, Sun 8 a.m
Acc : பாலகயன்
Eco: விக்கி
B.ST : யசோ
★ தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.
★ கடந்த பெறுபேறு எமது சான்று அனுமதி பெறலாம்

CHEMISTRY
(GROUP CLASS)
REPEAT
THEORY PAPER
ஆரம்பம்: 14.10.2006
சனி, ஞாயிறு 8- 10 மணி
DIAS B.Sc(Hons)
COLLEGE OF CHEMISTRY
பழம் றோட், கந்தர்மடம்

கணக்கீடு
பாலகயன்
A/L 2007 / 2008
PAPER CLASS
Sat / Sun 4 - 5
ஆரம்பம்
14.10.2006 (Sat)
BRAIN POWER INSTITUTE

## சிப்பாய்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுடன் மீட்கப்பட்டிருக்கிறார் என்று புலிகளின் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

கொல்லப்பட்ட 75இற்கும் மேற்பட்ட இராணுவத்தினரின் சடலங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. இராணுவத்தினரின் 4 டாங்கிகள் விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டுள்ளன. பல நூற்றுக் கணக்கான போராயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள் ளன. இராணுவத்தரப்பைச் சேர்ந்த ஒருவரும் விடுதலைப் புலிகளால் பிடிக்கப்பட்டுள்ளார் - என்று புலிகள் அறிவித்துள்ளனர். (ஐ-12)

## முகமாலை - கிளாலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றைய சமரை எதிர்த் தரப்பே முதலில் தொடங்கியது என இரண்டு பக்கத்தினருமே மாறிமாறிக் குற்றம் சுமத்தினர்.

எனினும், அரசுப் படைகள் பெரும் படை நகர்வு முயற்சி ஒன்றை ஆரம்பித்த போதே உக்கிரச் சமர் வெடித்ததாக சுயாதீனச் செய்திகள் தெரிவித்தன.

இந்த யுத்தத்துக்கு முன்னேற்பாடாக இந்த முன்னரங்க நிலைகளை நோக்கி அரசுத் தரப்பு படைகளையும், யுத்தத் தளபாடங்களையும், ஆட்லறிகள், பல் குழல் ஏவுகணைகள் போன்றவற்றையும் பெருத்த எடுப்பில் நகர்த்தி வருகின்றது எனப்புலிகள் - முற்கூட்டியே - கடந்த இரண்டு, மூன்று நாட்களாகவே - குற் றம் சுமத்தி வந்தனர் என்பது தெரிந்ததே.

''இலங்கை இராணுவம் காலை 6.30 மணியளவில் முகமாலை, கிளாலி ஆகிய இரு முனைகளில் எங்கள் பிரதேசங்களை நோக்கிப் பெரிய படை நகர்வை ஆரம்பித்தது. புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் அரச படைகள் முன்னேறியதை அடுத்து அங்கு முழு அளவிலான கடுஞ் சமர் வெடித்தது.'' - என்று புலிகளின் இராணுவப் பேச்சாளர் இ. இளந்திரையன் நேற்று மதியம் தெரிவித்தார்.

''புலிகள் எங்களின் (அரச படைகளின்) நிலைகளை நோக்கித் தொடர்ந்து கடும் மோட்டார் மற்றும் பீரங்கித் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். அவர்கள் எங்களது நிலைகளை நோக்கி முன்னேற முற்பட்டபோதே சண்டை வெடித்தது.'' - என்றார் அரச இராணுவத்தின் பேச்சாளர் பிரிகேடியர் சமரசிங்க.

### கிபிர் விமானம் குண்டு வீச்சு

முகமாலை முன்னரங்கத்தில் உள்ள புலிகளின் நிலைகள் மீது இஸ்ரேல் தயாரிப்பு 'கிபிர்' குண்டு வீச்சு விமானங்கள் மூலம் விமானப்படையினர் குண்டு வீசி வருவதையும் அவர் உறுதிப்படுத்தி னார்.

இத்தாக்குதல்கள் மூலம் புலிகளின் முன்னேற்ற முயற்சி முறியடிக்கப்பட்டது என்றும் அவர் கூறினார்.

நேற்றைய சமரில் படையினர் தரப்பில் இரண்டு டசினுக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர் என்றும், 115 பேர் வரைப் படுகாயமடைந்தனர் என்றும் புலிகள் தரப்பு இணையத் தளச் செய்திகள் தெரிவித்தன.

முன்னரங்கப் பகுதிகளில் படுகாயமடைந்த படையினர் வாகனங்கள் மூலம் வரணி இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு, பின்னர் அங்கிருந்து ஹெலிகள் மூலம் பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர் என்று, உள்ளூர்த் தகவல்களை மேற்கோள் காட்டி அந்த இணையத் தளச் செய்திகள் தகவல் வெளியிட்டன.

இந்த நடவடிக்கையில் மூன்று ஹெலிக் கொப்டர்கள் பயன்படுத்தப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுப் பிற்பகலில் நாகர்கோவில் பகுதியில் தொடர்ந்து ஷெல் சத்தங்கள் கேட்டன. எனினும், மதியத்துக்குப் பின்னர் அங்கும் பெரிய அளவில் சமர் நடந்ததாகத் தகவல் ஏதும் இல்லை.

நேற்று தங்கள் நிலைகளை நோக்கி அரச படைகள் வலிந்த தாக்குதலை ஆரம்பித்தன எனப் புலிகள், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் உடனடியாகவே முறையிட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய சமரை அடுத்து அரச இராணுவத்தின் யாழ். தலைமைப்பீடம் தென்மராட்சியில் அல்லாரை, கச்சாய், வேலக்கேணி, தனங்கிளப்பு, கோவிலாக்கண்டி ஆகிய பகுதிகளில் நேற்றுக் காலை 8.15 மணியிலிருந்து, இன்று காலை 5 மணி வரை ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்தது. (உ)

## இது ஒரு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறினார்.

குறைந்த பட்சம் 75 இலங்கை அரசுப் படையினர் கொல்லப்பட்டனர் என்றும், தங்கள் தரப்பில் பத்துப்பேர் கொல்லப்பட்டனர் என்றும் புலிகள் தெரிவித்துள்ளார்கள். இது ஒரு மோசமான சண்டை - என்று ஓமர்சன் தெரிவித்தார். (ஐ-12)

## திடீர் ஊரடங்குச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொடிகாமம் - வரணி வீதி போக்குவரத்துக்குத் தடைசெய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டதையடுத்து பஸ் சேவைகள் மீசாலை சந்தியிலிருந்து நடைபெற்றன.

இதேவேளை - கொடிகாமம் நகர்ப் பகுதியில் ஷெல் வீழ்ந்து வெடித்ததில் பெண்ணொருவர் பலியானதாகவும் நகரப்பகுதி வர்த்தக நிலையங்கள் ஷெல் சிதறல்களால் சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டபோதிலும், அவற்றை உறுதிப்படுத்தமுடியவில்லை.

## கண்காணிப்புக் குழுவினர்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் அணி திரண்டிருந்தார்கள். அத்துடன் சில இடங்களில் அவர்கள் ஊடுருவ முயற்சித்தார்கள். இது தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்பாளர்களிடம் நாங்கள் முறையிட்டிருக்கின்றோம். இதனால், நாங்கள் பதில் தாக்குதல் நடத்த நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறோம்.

சண்டை இன்னமும் முகமாலை, நாகர்கோவில் பகுதிகளில் தொடர்கின்றது. பெரும் சண்டை நடக்கிறது. நிறையப் பேர் அதில் பயன்படுத்தப்படுகின்றார்கள். நிறையவே ஆட்லறி, மோட்டார் தாக்குதல்கள் நடக்கின்றன. காயமடைந்தவர்கள் விமானங்கள் மூலம் கொழும்புக்கு கொண்டுசெல்லப் படுகின்றார்கள்.

★ **கேள்வி:-** சரி... நீங்கள் கூறுகிறீர்கள் விடுதலைப் புலிகளே உங்களைத் தாக்கினர் என்று. ஆனால், இராணுவத்தினர்தான் சண்டையைத் தூண்டியதாக விடுதலைப் புலிகள் முறையிடுகின்றனர். என்ன நடந்தது என்பதை உறுதிசெய்ய சுயாதீனமான வகையிலே ஆதாரம் எதுவும் கிடையாது. இரு தரப்பினரும் கூறுவதை நாங்கள் எப்படி உறுதிசெய்வது?

● **பிரசாத் சமரசிங்க:-** நீங்கள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் இதனை உறுதிசெய்யமுடியும். கடந்த சில தினங்களாகவும், இன்றும் (புதன்) விடுதலைப் புலிகள் சண்டையைத் தூண்டுவதாகவும், எமது முன்னணி அரண்கள் மீது அவர்கள் தாக்குதல் நடத்துவதாகவும், ஊடுருவ முயல்வதாகவும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் நாங்கள் கூறியிருக்கிறோம்.

★ **கேள்வி:-** ஆனால் போர் நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் களத்தில் இல்லையே...?

● **பிரசாத் சமரசிங்க:-** சண்டை நடக்கும்போது எவரும் அங்கு இருக்கமுடியாது. உங்களுக்கு ஞாபகம் இருக்கும் என்று நினைக்கின்றேன். இரண்டு வாரங்களுக்கு முன்பு நாம் வெளிநாட்டுச் செய்தியாளர்களை முகமாலைப் பகுதிக்கு அழைத்துச் சென்றபோது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினார்கள். ஆகவே, கண்காணிப்பாளர்கள் அங்கு உடனடியாகப் போக விரும்பமாட்டார்கள். அவர்கள் அப்படிப் போக விரும்பினால் அவ்களுக்கு வழித்துணை வழங்க நாங்கள் தயார். கண்காணிப்பாளர்கள் அங்கு செல்வதை நாம் எந்தவகையிலும் தடைசெய்யவில்லை. அவர்கள் விரும்பினால் அங்கு போகலாம். ஆனால், முன்னணிக் காவலரண் பகுதியில் பாதுகாப்புக் குறித்து எவரும் உறுதிசெய்யமுடியாது. அவர்கள் அங்கு போவதை நாங்கள் தடுக்கமாட்டோம்.

★ **கேள்வி:-** சரி... பிரிகேடியர் இன்று யாழ்ப்பாணப் பகுதியிலே நடைபெற்ற சண்டையில் நீங்கள் விமானத்தைப் பயன்படுத்தியிருக்கிறீர்கள், தரைப்படையின் முழுப் பலத்தையும் பிரயோகித்துச் சண்டைபோட்டிருக்கிறீர்கள். எனினும், விடுதலைப் புலிகளின் முன்னணிக் காவலரண் பகுதியை உங்களால் தகர்த்து முன்னேற முடியவில்லை என்பதுபோல் தோன்றுகிறதே. இது உங்களுக்கு ஒரு பின்னடைவாகப் படலாமா?

● **பிரசாத் சமரசிங்க:-** விடுதலைப் புலிகளின் முன்னணிக் காவலரண் பகுதியை நாங்கள் தகர்க்கமுயல்கின்றோம் என்று கூறுவது தவறானது ஆகும். முற்றிலும் தவறான விடயத்தை நீங்கள் கூறுகிறீர்கள். ஒகஸ்ட் 11ஆம் திகதி அவர்கள் எங்களைத் தாக்கினார்கள். நாம் சிறிது பின்வாங்கி எமது நிலையை மீண்டும் பிடித்தோம். பின்னர் செப்டெம்பர் 8ஆம் 9ஆம் திகதிகளில் அவர்களது நிலைகளிலிருந்து அவர்களை நாங்கள் துரத்தினோம். இன்று அவர்களது முன்னணிக் காவலரண்களை நாங்கள் தாக்கவில்லை. அவர்கள்தான் தாக்கினார்கள். நாங்கள் பதில் தாக்குதல் மாத்திரம்தான் நடத்தினோம்.

★ **கேள்வி:-** இலங்கை இராணுவம் கனரக ஆயுதங்களை முன்னரங்குகளை நோக்கி நகர்த்துவதாகவும், ஆகவே, அங்கு ஒரு பெரும் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம் என்றும் குறிப்பாக ஆனையிறவு தாக்கப்படலாம் என்றும் சில விடுதலைப் புலிகளின் ஆதரவு இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டிருந்தனவே...? இதுபற்றி...?

● **பிரசாத் சமரசிங்க:-** தமது இராணுவ உத்திகள் குறித்துப் பெரும்பாலும் எவரும் தொடர்பு சாதனங்களுக்குக் கூறுவது கிடையாது. ஆனால், விடுதலைப் புலிகள் எம்மீது தாக்குதல் நடத்துவதைத் தடுப்பதற்காக நாங்கள் சில ஆயுதங்கள் போன்றவற்றை முன்னகர்த்த நேர்ந்திருக்கிறது. ஏனென்றால் பெரும்படையெடுப்புக்கான ஏற்பாடுகளை, அணி திரள்வுகளை விடுதலைப் புலிகள் மேற்கொள்வதாக எமக்கு உளவுத் தகவல்கள் கூறுகின்றன. இது குறித்துப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு முறையிட்டிருக்கிறோம். (ஐ-12)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.10.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org